Follow us:

தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 63 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(16.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 19 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

கடலில் மூழ்கி இரு இளைஞர்கள் உயிரிழப்பு

பேருவளையில் துயரம்

02 பக்கம்

செப்.19 பாடசாலைகளுக்கு விடுமுறை

02 பக்கம்

எரிவாயு கொள்வனவில் மிகப்பெரிய ஊழல்;

விசாரணை நடத்தப்பட வேண்டுமென சரித்த ஹேரத் எம்.பி. வலியுறுத்து

யோ.தர்மராஜ்

லிட்ரோ எரிவாயு கொள்வனவின் போது பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளது. கணக்காய்வு அறிக்கை கிடைத்தவுடன் நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்தி, இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என கோப் குழுவின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

உலக வங்கியின் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவதை தான் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அதனை நிராகரிப்பதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

மார்ச் 20இற்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

தமிழர்களுக்கு விரைவில் தீர்வு!

ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகாது எனவும் தெரிவிப்பு

02 பக்கம்

மாணவர்களுக்கு பகுதி நேர தொழில்

பேராதனைப் பல்கலைக்கழகம் நடவடிக்கை

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பகுதி நேர தொழில்வாய்ப்பை வழங்குவதற்கு அதன் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதனடிப்படையில் மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் 13 மணித்தியால வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் மாணவர்கள் தொழில்புரியும் மணித்தியாலம் ஒன்றுக்கு 350 ரூபா வழங்குவதற்கும் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்கலைக்கழக துப்புரவாக்கல் பணிகள் மற்றும் இணையதளம் ஊடான செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக உபவேந்தர் எம்.டி.லமாவங்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாணவர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் வரை 170 பேர் பகுதிநேர தொழில்வாய்ப்புக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வழங்கிவைக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 60ஆக குறைப்பு

அமைச்சினால் சுற்றறிக்கை வெளியீடு

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60ஆகக் குறைக்கும் வகையில் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

அரசும் படைகளும் தப்பிக்க முடியாதவாறு இறுக்கமான தீர்மானத்தை நிறைவேற்றுக!

ஐ.நாவிடம் சம்பந்தன் வேண்டுகோள்

"மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்"- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

02 பக்கம்

தரமற்ற அரிசி விவகாரம்;



அமைச்சர்கள் இருவருக்கிடையே கருத்து முரண்பாடு



யோ.தர்மராஜ்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியினால் அமைச்சர்கள் இருவருக்கிடையே இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கருத்தை நிராகரித்துள்ள வர்த்தக அமைச்சர் நளின் பெர்னான்டோ விவசாய அமைச்சருக்கும் பதில் வழங்கியுள்ளார்.

02 பக்கம்

தனது பணத்தையே கொள்ளையடித்த பெண்

லெபனான் வங்கியில் கைவரிசை



02 பக்கம்

தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல்

படப்பிடிப்பு : யாழ். செய்தியாளர்

02 பக்கம்

ஐ.நாவுக்குத் தெரியாத உள்நாட்டு மிலேச்சத்தனம்

இம்முறை அதிகாரிகள் எடுத்துரைப்பார்களென அமைச்சர் சுசில் தெரிவிப்பு

யோ.தர்மராஜ்

இலங்கையில் 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான செயற்பாடுகள் எதுவும் மனித உரிமைகள் பேரவைக்கு தெரியாது என்பதே மிகப்பெரும் பிரச்சினையாகவுள்ளது. எனவே, அதனை எங்களுடைய அதிகாரிகள் ஜெனீவாவில் எடுத்துரைப்பார்கள் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு...

02 பக்கம்

பேராசிரியர் ராஜ் ராஜேஸ்வரன் காலமானார்

பேராசிரியர் ராஜ் ராஜேஸ்வரன் மேற்கு அவுஸ்திரேலிய நகரான பேர்த்தில் நேற்று முன்தினம் காலமானார்.

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையை ஆரம்பித்த இவர்...

02 பக்கம்

உஷ்

ஜனாதிபதி ரணிலுக்கு நெருக்கமான ஒருவர், அவரின் பெயரைப் பயன்படுத்தி பிரபல தொழிலதிபர்கள் பலரை அச்சுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதாக ஜனாதிபதியிடமே முறைப்பாடு சென்றுள்ளதாக தகவல்.

இந்த தகவல் தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரமுகரை அழைத்து ஜனாதிபதி ரணில் நேரடியாகவே எச்சரிக்கை விடுத்துள்ளாரென தெரியவருகிறது.

சீதுவ விகாராதிபதி கொலை;

தலைமறைவாகியிருந்த இளம் பிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

ரேமன் அபோன்சு

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேத்தே வநந்தாராம விகாரையின் விகாராதிபதி மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளதையடுத்து, தலைமறைவாகியிருந்த இளம் பிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

02 பக்கம்

மலேஷிய முன்னாள் அமைச்சர் டத்தோ சாமிவேலு காலமானார்

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

புலி பதுங்குறது பாயுறதுக்கென்டு சொல்லுவாங்கள். சம்பந்தன் ஐயாவின்ர அறிக்கையை பார்த்தீங்களா?

இலங்கைக்கு இனி நிதி உதவி கிடையாது - இந்தியா அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான பூர்வாங்க கடன் ஒப்பந்தத்திற்குப் பின்னர் இலங்கையின் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் ஸ்திரமாகத் தொடங்குவதால், இவ்வாண்டு நீடிக்கப்பட்ட 4 பில்லியன் டொலர்களுக்கு மேல் இலங்கைக்கு புதிய நிதி உதவியை வழங்க இந்தியா திட்டமிடவில்லை என இந்தியா தெரிவித்துள்ளது.

நாங்கள் ஏற்கனவே 3.8 பில்லியன் டொலர் மதிப்பிலான உதவிகளை வழங்கியுள்ளோம். நாடுகள் தொடர்ந்து உதவி செய்ய முடியாது.இப்போது இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெறவுள்ளது என இலங்கையுடனான கலந்துரையாடல்களை நேரடியாக அறிந்த இந்திய அரசாங்க வட்டாரம் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டின் இறுதியில் ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியாவுடன் இலங்கை நடத்த திட்டமிட்டுள்ள நன்கொடையாளர் மாநாட்டிற்கு இந்தியா அழைக்கப்படும் என்று அந்த வட்டாரம் தெரிவித்தது.

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக மஹேல நியமனம்

யோ.தர்மராஜ்

அவுஸ்திரேலியாவில் இடம்பெறும் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன, இலங்கை அணியுடன் இணைந்துகொள்ளவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன, இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியுடன் இணைந்துகொள்ளவுள்ளார். இவர் இலங்கை அணியின் ஆலோசகராக பணியாற்றுவார். அதன்படி, இலங்கை அணி ஒக்டோபர் 2ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படவுள்ள நிலையில், ஒக்டோபர் 6ஆம் திகதி இலங்கை அணியுடன் மஹேல அவுஸ்திரேலியாவில் இணைந்துகொள்ளவுள்ளார். அன்றைய தினம் முதல் போட்டித்தொடர் முடியும்வரை மஹேல ஜயவர்தன இலங்கை அணியுடன் இருப்பார் - என்றார்.

நீர்க் கட்டணம் செலுத்தாத எம்.பிக்களின் வீடுகளுக்கு விநியோகம் துண்டிக்கப்படும்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவிப்பு

நீர்க் கட்டணத்தை செலுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கான நீர் விநியோகத்தை துண்டிக்குமாறு ஆலோசனை கிடைத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

நீர்க் கட்டணங்களை செலுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை சபாநாயகருக்கு நேற்று (15) அனுப்பியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வர்த்தகப் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுமார் 3 மில்லியனுக்கும் அதிக கட்டணம் செலுத்தப்படவேண்டியுள்ளதாக அவர் இதன்போது கூறியுள்ளார்.

மார்ச் 20இற்கு முன்...

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இம்மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தமக்கு கிடைக்குமென ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் இதுவரை காலம் தேர்தலை நடத்த முடியாமற்போனதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர் பட்டியலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி இறுதிப்படுத்த முடியுமென நம்புவதாக தெரிவித்துள்ள அவர், அவ்வாறில்லாத பட்சத்தில் 2021ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே தேர்தலை நடத்தமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தரமற்ற அரிசி விவகாரம்...

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி, மக்கள் உண்பதற்கான தரத்தைக்கொண்டதல்ல என்பதோடு, அது மிருகங்கள் உண்பதற்கே பொருத்தமானது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ,

இலங்கைக்கு தற்போது இறக்குமதி செய்யப்படும் எல்லா வகை அரிசிகளும் மக்கள் பாவனைக்கு உகந்ததென அனைத்து பரிசோதனைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விவசாய அமைச்சர் எந்த அடிப்படையில் இந்தக் கருத்தை தெரிவித்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு அவரிடம் அறிக்கை இருந்தால் அதனை சமர்ப்பிக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

மிருகங்களுக்காக இலங்கையில் அரிசி இறக்குமதி செய்யப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு விரைவில் தீர்வு!...

வடக்கு மற்றும் தமிழ் மக்களுடன் அடுத்த சில மாதங்களில் இறுதித் தீர்வு ஏற்படுமென நம்புவதாகவும் இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்திவருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பல நாடுகளில் உள்ளதைப்போன்றே நாமும் உணவுப் பற்றாக்குறை, பொருளாதார வளர்ச்சியில் தடை, உலகளாவிய காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம்.

நாம் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். எமது கவனம் திசைதிருப்பப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. இலங்கையின் பாதுகாப்பை நாம் உறுதிசெய்யும் அதேநேரம், எந்தவொரு பாதகமான விளைவும் இந்தியாவுக்கு ஏற்படாது என்பதையும் நாம் உறுதிசெய்வதுடன், தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் இருப்போம்.

இந்தியாவைப்போன்றே எமக்கு மாலைதீவும் மிக முக்கியமானது. எமது கடல் எல்லைகள் இந்தியாவுடனும், மாலைதீவுடனும் இருக்கின்றது. அவர்களின் பாதுகாப்புப் பிரிவினருக்கு சிறந்த பயிற்சியைக் கொடுப்பதற்கே எம்மால் உதவ முடியும்.

யுத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. அந்த யுத்தத்தில் நாம் வெற்றிகண்டோம். தற்போது நாம் நாட்டில் சமாதானத்தை கொண்டுவர வேண்டும். அதைத்தான் நாம் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு மற்றும் தமிழ் மக்களுடன் அடுத்த சில மாதங்களில் இறுதித் தீர்வு ஏற்படும் என நான் நம்புகிறேன். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நான் தற்போது பேச்சு நடத்தி வருகிறேன். என்றாலும் எதிர்காலத்தைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

தற்போது எதிர்கொண்டுள்ள பயங்கரவாதம், முன்னர் எதிர்கொண்ட பயங்கரவாதத்தை போன்றதல்ல. நாம் அவ்வாறான பயங்கரவாதத்தை மீண்டும் எதிர்கொள்ள மாட்டோம் என நம்புகின்றேன். என்றாலும் அதனை முறியடிப்பதற்கு ஏதுவாக எம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். மூன்றாம் தரப்பினரைத் தாக்குவதற்காக பயங்கரவாதிகள் இலங்கையை பயன்படுத்தக்கூடிய ஆபத்தான நிலை உள்ளது என்பதை நாம் எப்போதும் கவனத்திற்கொண்டிருக்க வேண்டும்.

பேராசியர் ராஜ் ராஜேஸ்வரன்...

அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்திற்கும் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கும் தன்னலமற்ற மற்றும் தாராளமான பங்களிப்பாளராகவும் இருந்தார்.

யாழ்ப்பாணம், உரும்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் ராஜேஸ்வரன் ஸ்கொட்லாந்தின் எடின்பர்க்கில் படித்து சென்ட்ரி பெற்றோலியம் லிமிடெட் நிறுவனத்தின் தலைவரானார்.

மேற்கு அவுஸ்திரேலிய கேர்டின் (Curtin) பல்கலைக்கழகத்தில் பெற்றோலிய பொறியியல் துறையை ஆரம்பித்து வைத்த இவர் மேற்கு அவுஸ்திரேலிய பெற்றோலிய ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகவும் இருந்தார்.

2004ஆம் ஆண்டில், கலாநிதி ராஜேஸ்வரன் ஸ்கொட்லாந்து இன்டர்நேஷனல் வங்கியால் அவுஸ்திரேலியா மற்றும் ஆசியாவிற்கான தொழில்நுட்ப இயக்குநராகப் பணியமர்த்தப் பட்டார்.

தமிழ் ஈழப் பொருளாதார ஆலோசனைக் கூடம் (TECH- Australia) அவுஸ்திரேலியாவை நிறுவுவதில் முக்கிய பங்காற்றிய அவர், தமிழர் தாயகத்தில் சவாலான பொருளாதாரத் தடைக் காலத்தில் நிதி ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் விடுதலைப் போராட்டத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கினார்.

ஈழத் தமிழ் சமூகத்திற்கு சர்வதேச ரீதியில் பெருமைசேர்த்த அமரர் ராஜேஸ்வரனின் மறைவு பேரிழப்பாகும்.

தனது பணத்தையே...

லெபனானில் தனது வங்கி சேமிப்புத் தொகை 13 ஆயிரம் டொலர் பணத்தை திருப்பித் தர அதிகாரிகள் கெடுபிடி செய்ததால், பொம்மைத் துப்பாக்கியைக் காட்டி சலி ஹபீஸ் என்ற பெண் அதனை கொள்ளையடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லெபனான் நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றது. இதனால் அங்குள்ள வங்கிகளிலிருந்து வாடிக்கையாளர்கள் பணம் எடுக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் அவசரகாலத்திற்கு சிக்கலில் தவித்து வருகின்றனர். இந்நிலையில், சலி ஹபீஸ் என்ற பெண், தனது சகோதரியின் புற்றுநோய் சிகிச்சைக்காக வங்கியில் தான் சேமித்து வைத்திருந்த பணத்தை திரும்ப எடுக்க முயன்றுள்ளார். ஆனால், மாதத்துக்கு 200 டொலர்கள் மட்டுமே எடுக்க முடியும் என வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தனது சகோதரிக்கு சிகிச்சை மேற்கொள்ள சிரமம் ஏற்படும் என்பதை உணர்ந்த ஹபீஸ், விநோதமான செயலில் ஈடுபட்டுள்ளார். வங்கியால் பாதிக்கப்பட்ட தன்னார்வலர்களுடன் இணைந்து பொம்மை துப்பாக்கியை காட்டி வங்கியிலுள்ள தனது சேமிப்புத் தொகையான 13 ஆயிரம் டொலர் பணத்தை கொள்ளையடித்துள்ளார்.

இதனை சமூக வலைத்தளத்தில் நேரடியாகவும் ஹபீஸ் ஒளிபரப்பு செய்துள்ளார்.

செப். 19 பாடசாலைகளுக்கு...

அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு நேற்று (15) அறிவித்துள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் இறுதிச் சடங்கு இடம்பெறுவதை முன்னிட்டு அன்றைய தினத்தை தேசிய துக்க தினமாகவும் விசேட அரச விடுமுறையாகவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் ...

அதன்பிரகாரம் நீதிச் சேவை உத்தியோத்தர்களைத்தவிர ஏனைய அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் இந்தத் திருத்தம் பொருந்துவதாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே.மாயாதுன்னேவால் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் 60 வயதுடையோர் ஓய்வு பெறுவது கட்டாயமானதாகும்.

அறுபது வயதுக்கு மேல் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் 2022 டிசம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 60 வயது பூர்த்தியாகும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் விருப்பப்படி 2022.12.31இற்கு முன்னர் ஓய்வுபெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஓய்வுபெறவுள்ள ஊழியர்கள் உரிய நடைமுறைப்படி தங்களது ஓய்வுபெறும் விண்ணப்பங்களை உரிய அதிகாரியிடம் ஒப்புதல் பெற்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்குத் தெரியாத...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இவ்வாறு தொடர்ந்து பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது. இதற்கமைய தற்போது முன்வைத்துள்ள விடயங்களும் புதிதானதல்ல. எனினும், உலகில் பலம் வாய்ந்த சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் எங்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றன.

எங்களை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் செயற்படும் நாடுகளும் இருக்கின்றன. இது எங்களுக்கு புதிய விடயமல்ல. எனவே, இதற்கு நாங்கள் முகங்கொடுத்தாக வேண்டும்.

88 மற்றும் 89ஆம் ஆண்டுகளில் தற்போதைய அடக்குமுறைகளை விட மோசமானதாக இருந்தது. 60 ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அதுவே மிலேச்சத்தனமாகும். விடுதலைப் புலிகள், துப்பாக்கிக்காரர்கள் மற்றும் அரச பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு அப்போதைய இளைஞர்கள் சிக்குண்டிருந்தனர். ஆனால், அப்போது மனித உரிமைகள் பேரவை இருக்கவில்லை என்பதே பிரச்சினையாகும்.

எனவே, ஒரு நாட்டில் சாதாரண மனிதன் வாழ்வதற்கான உரிமை இருக்கவேண்டும். இதற்கு யாரேனும் தடையாக இருந்தால் அதற்கு எதிராக சட்ட ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு பொறுப்புள்ளது. ஆனால், அப்போதைய யுகத்தில் இவை இருக்கவில்லை.

இந்த யுகத்தை மறந்துவிட்டே தற்போது பலரும் பேசுகின்றனர். மனித உரிமைகள் பேரவைக்கும் இது தெரியாது. எனவே, இதனை எங்களுடைய அதிகாரிகள் மனித உரிமைகள் பேரவைக்கு எடுத்துரைப்பார்கள் - என்றார்.

சீதுவ விகாராதிபதி கொலை...

விகாரையில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அறையொன்றிலிருந்து

விகாராதிபதியின் சடலத்தை நேற்றுமுன்தினம் மீட்டனர். வாய்க்குள் துணிவைத்து அடைத்து சரீரத்தை பிக்குவின் ஆடையால் சுற்றியிருந்த நிலையில் சடலம் காணப்பட்டுள்ளது.

இதன்போது 55 வயதுடைய மெதகமுவே மகாநாம தேரரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த நீர்கொழும்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் நெல்சன் குமாரநாயக்க விசாரணைகளை மேற்கொண்டார். பிக்கு சடலமாக மீட்கப்பட்ட இடத்திலும் மேலும் சில இடங்களிலும் மிளகாய்த்தூள் கொட்டப்பட்டிருந்தமை இதன்போது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டபோது அந்த விகாரையிலிருந்த இளம் பிக்கு ஒருவர் தலைமறைவாகியிருந்தமையும் இரு வாகனங்கள் காணாமல்போயிருந்தமையும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கில் விமான நிலையத்துக்கு வந்த குறித்த இளம் பிக்குவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். சீதுவ பொலிஸாரினால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் 18 வயதான பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். EK649 என்ற விமானத்தின் ஊடாக டுபாய் நோக்கிப் பயணிப்பதற்காக வருகைதந்த வேளையிலேயே சந்தேக நபரான பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் கம்பஹாவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு இரு வாகனங்களையும் விற்பனைசெய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சீதுவ பொலிஸார் விசாரணைளை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசும் படைகளும் தப்பிக்க...

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை தவறியுள்ள நிலையில், மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும், சர்வதேச சட்டவரம்பின் மூலமான வழிமுறைகளைப் பயன்படுத்தல் மற்றும் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்தல் உள்ளடங்கலாக பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கும் உறுப்புநாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் ஆணையாளர் நாடா அல்-நஷீப் வலியுறுத்தியிருந்தார்.

அதேவேளை, இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் 17 பக்க எழுத்துமூல அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில், அதன் சாராம்சத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளர் வாசித்திருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத்தொடரின் ஆரம்ப நாளில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் ஆணையாளர் ஆற்றிய உரையை வரவேற்கின்றோம்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த அறிக்கையையும் நாம் வரவேற்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைககளை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனம் செய்துவருகின்றது.

அரசியல் தீர்வு சம்பந்தமான பரிந்துரையையும் கூட இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் அமுலில்தான் இருக்கின்றது. அதன்கீழ் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

ஐ.நாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தபோதிலும் அவற்றில் எதுவும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகளைக் கிடப்பில் போட்டுவிட்டு சர்வதேச சமூகத்தை இதுவரைகாலமும் இலங்கை அரசு ஏமாற்றி வந்தது.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் இம்முறை ஜெனீவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே தீர வேண்டும்” - என்றார்.

கடலில் மூழ்கி...

பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகல்கந்த கடலில் நீராடச் சென்ற இருவர் அலையில் சிக்கி உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று (15) முற்பகல் 11.40 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர். இந்த அனர்த்தத்துக்கு 17, 18, 19 ஆகிய வயதுடையவர்களே முகங்கொடுத்துள்ளனர். கடலுக்கு நேற்று முற்பகல் நீராடச் சென்றபோது பாரிய அலையில் சிக்கி காணாமல்போயுள்ளனர். கடற்படையினரும் பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு மூவரையும் மீட்டுள்ளனர். எனினும், இருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் பேருவளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர்கள் மாகல்கந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

எரிவாயு கொள்வனவில்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை எரிவாயு கொள்வனவுக்காக விலைமனுக் கோரலை முன்வைத்தபோது, ‘ஏ’ என்ற கம்பனி, மத்திய வங்கி பெறுமதிக்கு மேலதிகமாக ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவை 96 டொலருக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளதோடு, ‘பி’ என்ற கம்பனி மத்திய வங்கி பெறுமதிக்கு மேலதிகமாக 129 டொலருக்கு வழங்குவதற்கும் முன்வந்துள்ளன. இந்தப் பட்டியலில் அதிக விலைக்கு எரிவாயுவை இலங்கைக்கு கொண்டுவந்து தர முடியும் என்ற கம்பனிகளும் இருக்கின்றன.

அதன்படி, ‘ஏ’ என்ற கம்பனியிடமிருந்தே எரிவாயுவை கொள்வனவு செய்யவேண்டுமென 2022 ஜனவரி மாதம் அமைச்சரவையிலும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, நீண்ட ஒப்பந்தத்துக்கமைய எரிவாயு கொள்வனவை முன்னெடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், நாட்டுக்கு எரிவாயு தேவை என்பதால் மீண்டும் பழைய நிறுவனமான ‘பி’ என்ற அந்த நிறுவனத்திடமிருந்து மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, நீண்டகால ஒப்பந்தத்துக்கமைய எரிவாயு கொள்வனவு செய்யும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து கணக்காய்வு அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்படும் என நினைக்கின்றோம்.

இந்நிலையில், நாட்டில் கடந்த ஜூன் மாதம்முதல் எரிவாயு கொள்வனவில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டன. இதன் நேரடி கொள்வனவை முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. அதன்படி, நேரடி கொள்வனவுக்கமைய ஜூன் மாதத்தில் 15 ஆயிரம் மெற்றிக் தொன் தேவைப்பட்டது. அதன்படி, ஜூன் மாதத்துக்கு 15 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயு தேவையென நீண்டகால ஒப்பந்தத்துக்கமைய 96 டொலருக்கு வழங்குவதாகக் கூறிய நிறுவனத்திடம் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. அதன்படி, ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவை 112 டொலருக்கு வழங்குவதாக குறித்த நிறுவனம் பதில் வழங்கியுள்ளது.

இதனையடுத்து, ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்தால் பழைய விலையான 129 டொலருக்கே வழங்குவதாக ‘பி’ என்ற நிறுவனம் அறிவித்துள்ளது. இதனால், ‘ஏ’ என்ற நிறுவனத்தால் ஜூன் மாதம் 15 ஆயிரம் மெற்றிக் தொன் வழங்க முடியாது என்பதால், ‘பி’ என்ற நிறுவனத்திடம் அதிக விலைக்கு எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு தீர்மானம் எடுத்திருந்தாலும் ஜூன் மாதம் ‘பி’ என்ற நிறுவனம் ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவையும் கொண்டுவரவில்லை. ஜூலை மாதமே கொண்டுவந்துள்ளது.

எனவே, எரிவாயு கொள்வனவின்போது பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதே என்னுடைய சந்தேகமாகும். இதனை விசாரணை செய்து அறிக்கை வழங்குமாறு கணக்காய்வுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எரிவாயு கொள்வனவு செய்தது தொடர்பாக கணக்காய்வு அறிக்கை கிடைத்தவுடன் நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்தி, அது குறித்து விசாரணை நடத்துவது கட்டாயமானது – என்றார்.

ராஜபக்ஷ குடும்பத்தின் பணயக் கைதியாக தற்போதைய ஜனாதிபதி ரணில்

ஐ.தே.க. உறுப்பினர்களை கொலைசெய்தவர்களுக்கும் இன்று அமைச்சுப் பதவி வழங்கப்படுவதாக சஜித் தெரிவிப்பு

நாட்டு மக்கள் மனதில் பொதுமக்கள் போராட்டமொன்று எழுந்தது மக்களை ஒடுக்கும் அரசை விரட்டியடித்துவிட்டு ஜனநாயக அரசை ஸ்தாபிப்பதாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரக் கொலையாளியான பிரிவினர்களின் தயவில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்துள்ளனர். அவர் கூட தற்போது ராஜபக்ஷ குடும்பத்தின் பணயக்கைதியாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (15) அம்பாறையில் தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்தை தாக்கி முன்னாள் பிரதமர் பதவி விலகினார். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூட தேர்தல் காலத்தில் தாக்குதல்களையும் வன்முறைகளையுமே அவர்கள் மேற்கொண்டார்கள். ஐ.தே.க.காரர்களைத் தாக்கியவர்களுக்கும் ஐ.தே.க. உறுப்பினர்களைக் கொன்றவர்களுக்கும் கூட தற்போதைய ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை தேர்தல் தொகுதியின் பிரதான அலுவலக திறப்பு விழாவும் தேர்தல் தொகுதிக் கூட்டமும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று(15) நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் அம்பாறை மக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாருடைய அடிமைகளோ அல்லது கைதிகளோ அல்லர் என்றாலும், அன்று சிறந்து விளங்கிய நாட்டின் விவசாயிகள், மீனவர்கள், கூலித்தொழிலாளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், அங்கவீன குடும்பங்கள், பாடசாலை சிறுவர்கள் என அனைவரும் இன்று உதவியற்ற நிலையில் உள்ளனர். தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் திரிபோஷா கூட கொடுக்க முடியாத இந்த அரசாங்கம் இந்நாட்டின் பொருளாதாரத்தை அழித்தது.

தற்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதாக இல்லை. உர மானியம் கிடைப்பதில்லை. குழந்தைகளுக்கு பால்மா இல்லை. மண்ணெண்ணெயோ அல்லது பிற எரிபொருட்களோ இல்லாத நிலையில்,மொட்டு அரசாங்கம் தமக்கு நெருக்கமாக செயற்படும் பிரிவினர்களுக்கிடையே அமைச்சுப் பதவிகளை பகிர்ந்துகொள்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கொன்று குவித்த ராஜபக்ஷர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்காவிட்டாலும் அவர்களுடன் நட்புறவு கொண்டாடும் பிரிவினர்களூடாக அமைச்சுப் பதவிகளை பெற்று ராஜபக்ஷர்கள் விரும்பியவாறு நாட்டை ஆட்சிசெய்து வருகிறார்கள்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.10 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும் என நட்டஈடு வழங்கப்பட்டாலும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு கோடிக்கணக்காகும். ஈஸ்டர் தாக்குதலில் எங்களுடைய சொந்த மக்களே கொல்லப்பட்டாலும் சுகபோகம் அனுபவிப்பது அமைச்சர்கள்தான். இவ்வாறான நிலைவரங்களை உருவாக்க மக்கள் வீதியில் இறங்கவில்லை. மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இதுவல்ல. புதிய தேர்தல் மூலமே அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக அனைவரும் தயாராக உள்ளனர் - என்றார்

தேர்தல் நடவடிக்கைகள் ஊழல் நிறைந்தவை!

ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா அறிவிப்பு

நிறைவேற்று ஜனாதிபதி முறையில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறார்கள். ஒருசில அரசியல் கட்சிகளிலும் தனிநபர் ஆதிக்கமே காணப்படுகின்றது. எனவே, தேர்தல் நடவடிக்கைகளும் ஊழல் நிறைந்ததாகவே காணப்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டதரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழ் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது தீமையை ஏற்படுத்தும். அதனால் அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரப்படுகின்றது.

அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அநேகமான அரசியல் கட்சிகள் தொடர்பில் அவதானித்தால் அந்தக் கட்சிக்குள்ளும் தனிநபரொருவரே அதிகாரம் படைத்தவராக இருக்கிறார். கட்சித் தலைவரின் கொள்கைகளுக்கு அப்பால் அவர்களால் சிந்திக்க முடியாது.

ஒருசில கட்சிகளுக்குள்ளேயே பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டாலும், இறுதியில் அந்தக் குழுக்களின் இறுதித் தீர்மானங்கள் அதிகாரம் படைத்ததொரு தனி இடத்திலேயே காணப்படுகின்றது. இந்த விடயத்துடன் ஒப்பிடும்போது ஆணைக்குழுவின் தேர்தல் நடவடிக்கைகள் மிகவும் பலவீனதும், ஊழல் நிறைந்ததும் என்றே கருதத் தோன்றுகின்றது.

தேர்தல் நடவடிக்கைகள் ஊழல் நிறைந்தவை என்று தேர்தல் ஆணைக்குழு கூறுவதால், ஒருவேளை இந்தக் கருத்து பயங்கரமானதாகவும் அமையலாம்.

மேலும், வேட்பாளர்களாக தெரிவுசெய்யப் பட்டதன் பின்னர் பிரதிநிதிகளானதும் அவர் களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், சமூகத்திலுள்ள ஜனநாயக பிரச்சினைகளுடன் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தொடர்புடையது என்பதால் தற்போதுள்ள பிரச்சினையாக கருதப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் மாத்திரம் ஒழுக்க விதிமுறைகளை குறிப்பிட்டு வர்த்தமானி அறிக்கை இடுவோம். வர்த்தமானியை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்த்து, பிரதிகளை எடுத்து ஒருபுறமாக வைத்திருப்போம். ஒழுக்க விதிமுறைகள் ஒருபுறமிருக்க, பிரதிநிதிகளானதும் அவர்கள் விரும்பியதுபோன்று செயற்படுவார்கள். அதனை ஆணைக்குழு பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

எனவே, கலாநிதி, கௌரவம் போன்ற விடயங்கள் சட்ட ரீதியானதாக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு கோருகிறது. குறித்த கௌரவத்தை மீறுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயற்பாடாக கருதப்படவேண்டும். வேட்பாளராக இருக்கும் காலத்தில் மாத்திரமல்லாமல் பதவியிலிருக்கும் காலம் வரை நீடிக்க வேண்டும்.

நீரோடையில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு!

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளக் கல்லு மலைப்பகுதியில் உள்ள நீரோடையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குசலானமலை பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சித்திரவேல் சிறிகந்தராஜா (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது மனைவி மற்றும் மகனின் குடும்பத்துடன் குறித்த வெள்ளக்கல்லு மலைப்பகுதிக்கு மீன்பிடிப்பதற்கும் காட்டில் தேன் எடுப்பதற்காக மூன்று நாட்களுக்கு முன்னர் சென்றிருந்த நிலையில், உயிரிழந்தவர் தனது மனைவியிடம் 2,000 ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு பிலிப்பியர்சேனை பகுதிக்குச் சென்றுவருவதாகக் கூறி நேற்று முன்தினம் காலை சென்றிருக்கின்றார்.

ஊருக்குச் சென்றவர் திரும்பவில்லையென மலையில் எதிர்பார்த்திருந்த குடும்பம், நேற்று (15) குறித்த வெள்ளகல்லு மலைப்பகுதிகளிலுள்ள நீரோடையில் குறித்த நபர் சடலமாக கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தெரிவித்திருந்தனர்.

சிரமத்தின் மத்தியில் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டவர்கள் குறித்த இடத்துக்குச் சென்று மரண பரிசோதனை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதன் பின்னர் உறவினரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தடைசெய்யப்பட்டுள்ள களைநாசினியை வைத்திருந்தவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள களைநாசினியை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையின் செட்டிகுளம் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (14) மதவாச்சி பொலிஸ் பிரிவிலுள்ள மைத்திரிபுரம் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட 500இற்கும் அதிகமான களைநாசினி மருந்து பக்கற்றுகளை விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் 22 வயதுடைய உபுல்தெனிய பகுதியை வசிப்பிடமாகக்கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரை விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மதவாச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறு மீளாய்வு ஒன்லைன் முறையில்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை ஒன்லைன் ஊடாக கோருவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, நேற்று (15) முதல் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த 28ஆம் திகதி வெளியிடப்பட்டன.

இந்தப் பரீட்சையில் 2,72,682 பேர் தோற்றியதுடன், அதில் 1,71,497 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி அஷின் நயனிஸ்ஸரினால் 10,000 அமெரிக்க டொலர்கள் நன்கொடை

இலங்கை மக்களுக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மியன்மாரின் சிதகு சயாதவ் பிரதி சங்க ராஜா அதி வணக்கத்திற்குரிய கலாநிதி அஷின் நயனிஸ்ஸர 10,000 அமெரிக்க டொலர்களை (அண்ணளவாக இலங்கை ரூபா 36,79,200) அண்மையில் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மியன்மாரின் பிரதி சங்க ராஜாவை மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார மரியாதை நிமித்தம் சந்தித்தபோது, சிதகு சயாதவ் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி அஷின் நயனிஸ்ஸரவினால் யாங்கூனில் உள்ள சிதகு சர்வதேச பௌத்த அகாடமியில் வைத்து பண நன்கொடை தூதுவரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

நன்கொடையை ஏற்றுக்கொண்ட தூதுவர் ஜனக்க பண்டார, இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு 10,000 அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியமைக்காக மியன்மாரின் வணக்கத்திற்குரிய பிரதி சங்க ராஜாவுக்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் அம்பாறை முதல் யாழ்ப்பாணம் வரையான நினைவுப் பேரணி நேற்று (15) இடம்பெற்றது.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

ஜோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள், பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி. உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath suwamiji

தேநீர் பருகிட, முழு மாதத்திற்கும் ரூ.255 மட்டுமே
STEUARTS
ரோசா கஹட்ட
நறுமணமிக்க சுவை
ESTD 1835
200g
தே
PURE CEYLON TEA PACKED IN SRI LANKA
200 கிராமில் 100 கோப்பைகள்
இன்றே கொள்வனவு செய்யுங்கள்
கையிருப்புள்ளவரை மட்டுமே

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 16ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

மக்கள் மனங்களில் வாழும் அஷ்ரப்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் மறைந்து இன்றுடன் 22 வருடங்கள் மறைந்துள்ளன. முஸ்லிம் அரசியல் வரலாற்றில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் அரசியலை நோக்குகின்றபோது, மர்ஹூம் அஷ்ரப்பின் அரசியல் யுகத்திற்கு முன்னர் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு தனித்துவத்துடன் தலைமை வகிக்கும் தலைமை உருவாகவில்லை என்பதுதான் உண்மை.

1944ஆம் ஆண்டு அகில இலங்கை மலாய் அரசியல் யூனியன் உருவாக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு அகில இலங்கை இஸ்லாமிய முற்போக்கு முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி 1964இல் தோற்றம் பெற்றது. அவ்வாறு அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் உருவாகின. இக்கட்சிகளுக்கான தலைமைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆனால், இக்கட்சிகளினாலும். தலைமைகளினாலும் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக கூட்டாக இணைந்து செயற்படவும் முடியவில்லை. இதனால், முஸ்லிம் அரசியல் பலவீனமடைந்தது.

இந்நிலையில்தான், 1982ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் உதயமானது. முஸ்லிம் காங்கிரஸின் உதயம் வடக்கு, கிழக்கு முஸ்லிம் அரசியல் வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. வடக்கு, கிழக்கு முஸ்லிம் அரசியல் வரலாற்றுத் திருப்பத்திற்கும், 17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி மாற்றப் புரட்சிக்கும் வித்திட்ட ஆளுமை, மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் என்பதை மறக்க முடியாது. அதனால்தான் இன்றுவரை இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அதிலும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் அதிகம் அவரை நினைவுகூருபவர்களாக உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மண்ணில் 1948ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி பிறந்த அஷ்ரப், கல்முனை மண்ணில் வளர்ந்து, கம்பஹா மண்ணில் வாழ்க்கைத்துணையோடு இணைந்து, 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி சமூகத்தின் பல கனவுகளோடு விண்ணில் பறக்கையில் அரநாயக்க வான் பரப்பில் அகால மரணத்தை தனது 51ஆவது அகவையில் தழுவிக்கொண்டார்.

மரணத்தை எதிர்பார்த்தே தனது அரசியல் நகர்வுகளை நகர்த்திச் சென்ற அஷ்ரப், அதைத் தனது 'போராளிகளே புறப்படுங்கள்' என்ற கவிதை வரிகளால் உறுதிப்படுத்தியவர். அவர் மண்ணைவிட்டு மறைந்து 22 வருடங்களாகியும், அஷ்ரப்பின் தலைமைத்துவ ஆளுமையையும், பண்புகளையும், அவரால் இச்சமூகம் அடைந்த பயன்களையும் இன்னுமே அவரை நேசிக்கின்ற மக்களால் மறக்க முடியாதுள்ளது.

தூரநோக்கோடு ஒன்றை உருவாக்கி அதை அடைவதற்கான செயல் நுணுக்கத்தை விருத்தி செய்து, ஏனையவர்களின் ஆதரவைத் திரட்டி, தூரநோக்கை அடைந்துகொள்வதற்கான செயற்பாட்டை ஊக்கப்படுத்தி. அதன்மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியை 1982ஆம் ஆண்டு உருவாக்கி அதனை 1986ஆம் ஆண்டு அரசியல் கட்சியாகப் பதிவுசெய்தார் அஷ்ரப்.

அமரர் அஷ்ரப் தனது சமூகத்தின் நலன்களை பாதிக்கும் எந்தவொரு விடயத்துடனும் சமரசம் செய்துகொள்ளாதவர். அதனால் இதர சமூகங்களில் உதாரணமாக சொல்லப்பட்டவர். கொள்ளப்பட்டவர்.

தீகவாபி சம்பந்தமாக கங்கொடவில சோம தேரருடன் தொலைக்காட்சியில் விவாதித்தபோதுகூட எதிர்கால அரசியலை கருத்திற்கொண்டு பேரினவாத சக்திகளை சமாளித்துப் பேச அஷ்ரப் விரும்பவில்லை. இப்படி அவரின் ஆளுமையை சுட்டிக்காட்ட பல சம்பவங்களை குறிப்பிடலாம். நாடாளுமன்றம் என்ற மக்கள் மேடையை தனது பேச்சாற்றல் மூலம் கட்டிப்போட்டிருந்த அஷ்ரப், அரசியலில் பலருக்கும் சிம்மசொப்பனமாகவே திகழ்ந்தார். அதனால்தான் இன்றும் அவரது மரணம் விபத்தென்பதை அவர் ஆதரவு மக்கள் நம்ப, ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பில் பல விமர்சனங்கள் உள்ளன. அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் பல இடங்களில் தொய்வு நிலை ஏற்பட்டாலும், கட்சிக்குள் முரண்பாடுகள் பல எழுந்தாலும் அந்தக் கட்சி கட்டுக்கோப்பாக தனது பயணத்தை தொடர்வதற்கு காரணம் அஷ்ரப் அதற்கிட்ட அடித்தளமே ஏதுவாகும். அதேசமயம், விமர்சனங்களுக்கப்பால் தற்போதைய அதன் தலைவர் ரவூப் ஹக்கீமும் தனக்கேயுரிய பாணியில் கட்சிப்பணிகளை முன்னெடுத்துவருவதை காணமுடிகிறது. அரசியல் கட்சியென்பது சில்லறைக்கடை கிடையாது. சிக்கலான நேரங்களில் கடினமான தீர்மானங்களை எடுக்கவும், பல தியாகங்களை செய்யவும், பலரை சிலநேரம் கண்டித்து பல நேரம் அரவணைத்து, அனைத்து தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்து, மக்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றை தீர்த்துவைத்து செயற்படவேண்டிய தலையாய பொறுப்பு கட்சித் தலைமையிடம் இருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவரின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படும் இன்றைய நாளில், அவரின் இலக்குகளை அடையும் பயணத்தை அதன் இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் தொடரவேண்டும். சிங்கள, தமிழ் அரசியல் சமூகத்திற்குள் ஹக்கீமுக்கு இருக்கும் நட்புறவு, செல்வாக்கு அதற்கு கைகொடுக்கும். அதேசமயம், தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் உள்ள இடைவெளியை குறைக்கும் செயற்பாட்டுக்கும் அவர் முன்னுரிமையளிக்க வேண்டும். அதன் தாற்பரியத்தை தமிழ்த் தலைவர்களுக்கும் உணர்த்தவேண்டும்.

என்னதான் ஏசினாலும் பேசினாலும் வடக்கின் தமிழரசுக் கட்சி எப்படி அங்கு மக்கள் மனங்களில் கோலோச்சுகிறதோ அப்படியே முஸ்லிம்களின் மனதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த விருட்சத்தை ஆட்டலாம், அசைக்கலாம். ஆனால், வேரோடு பிடுங்கி அழிக்க முடியாதென்பதே இதுவரைகால வரலாறு. அந்தவகையில் அமரர் அஷ்ரப் மறைந்தாலும் தான் வளர்த்த அரசியல் கட்சியூடாக மக்கள் மனங்களில் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

விடியலின் விருட்சம் அஷ்ரப்



ஒரு சமூகத்தின் விடியலுக்காகப் போராடி, விருட்சத்திற்கு உரமாய்ப்போன ஒரு தலைவனின் நினைவுகள்.

இலங்கையில் மூன்றாவது பெரும்பான்மையான முஸ்லிம் சமூகம் தொன்றுதொட்டு இந்த நாட்டுக்கு விசுவாசமாகவும், நாட்டின் அபிவிருத்தி, வளர்ச்சி போன்றவற்றில் கணிசமானளவு பங்களிப்பும் செய்திருக்கிறது.

இந்தச் சமூகத்தில் பலர் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த வரலாறும், மன்னர் காலந்தொட்டு நடைபெற்று வந்திருக்கிறது.

இவ்வாறான சமூகம், பெரும்பான்மைக் கட்சிகளோடு இணைந்தே தங்களின் அரசியல் பயணத்தைத் தொடர்ந்து கொண்டுசென்றது. அதேநேரம், தமிழர்கள் தங்களின் உரிமைகளுக்காக தனிக் கட்சி அமைத்து போராடிக்கொண்டிருந்தார்கள். காலவோட்டத்தில் அரசியல் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றம் கண்டது.

ஆயுதப் போராட்டங்களில் முஸ்லிம் இளைஞர்களும் நாட்டம் கொள்வதைத் தடுக்குமுகமாக அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு அரசியல் பயணத்தை அஷ்ரப் ஆரம்பித்தார்.

காத்தான்குடி மண்ணில் ஓர் அமைப்பாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கம் அஷ்ரப்பிடம் 1980/81 காலப்பகுதியில் ஒப்படைக்கப்பட்டபோது, 1986இல் அஷ்ரபினால் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து தொடங்கிய சமூக விடுதலைப் போராட்டம் இன்றுவரை பல சவால்களுக்கு மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அன்று, இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் அடிக்கடி பேரினவாதிகளாலும் பயங்கரவாதிகளாலும் துன்பங்களை எதிர்நோக்க நேர்ந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பேரின கட்சிகளைப் பிரநிதித்துவம் செய்த முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எதனையுமே செய்ய முடியாத சூழ்நிலையில், முஸ்லிம் சமூகத்திடம் அபிப்பிராயம் பெறப்படாமல் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன் மூலமாக இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு மாகாணமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழர் தரப்பு முஸ்லிம்கள் தனித்துவமான சமூகம் என்பதை ஏற்க மறுத்து, தமிழ்பேசும் சமூகமாகக் காட்ட முனைந்தது. இதனால் உரிமை இழந்த சமூகமாக முஸ்லிம் சமூகம் மாற்றம் பெறும்போதுதான் பலர் விழித்துக்கொண்டு தனிவழி அரசியல் அல்லது தனிக்கட்சி அரசியல் தொடர்பாக பல முயற்சிகள் செய்தும் அவை பெரியளவில் வெற்றி பெறாத நிலையில்தான் கிழக்கு மண்ணிலிருந்து ஒரு குரல், அதுதான் அஷ்ரப் எனும் உரிமைக்குரல் ஓங்கி ஒலித்தது.

அரசியல் பயணத்தின் ஆரம்ப காலகட்டத்தில் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தன்னைக் கொல்வார்கள் என்று தெளிவாகத் தெரிந்த நிலையிலும், பல தடவைகள் தன்னைக்கொல்ல முயற்சிகள் நடந்த சந்தர்ப்பத்திலும் சமூக விடுதலையை நோக்காகக்கொண்டு இந்தப் பயணத்தைத் தொடர்ந்திருந்தார்.

அரசியலில் மூத்தவர்கள், பேரினக்கட்சித் தலைவர்கள் அஷ்ரப்பின் போராட்டத்தை நக்கலாகப் பார்த்தபோது பிற்காலத்தில் அவர்களுக்கே விக்கல் வரச்செய்தவர்.

இறை துணையோடு போராளிகளின் பலத்தோடு களம் கண்டவர். பிற்காலத்தில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக அரசியலில் முஸ்லிம் சமூகத்தை மாற்றியவர். தனித்துவம், உரிமை என முஸ்லிம்களும் இந்த நாட்டில் வாழும் தனி இனம் என அடையாளப்படுத்தினார். முஸ்லிம் சமூகத்திற்கு தங்களின் பலத்தை தங்களையே உணர்ந்துகொள்ளச் செய்தார்.

தமிழ்ச் சமூகத்தோடு நட்புறவு பாராட்டினார். அவர்களின் அபிலாஷைகளுக்கு குறுக்கே நிற்காது முஸ்லிம் சமூகத்தின் நியாயமான உரிமைகளைக் கோரி நின்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி, கவிஞர், பாடலாசிரியர், பேச்சாளர் என பல ஆளுமைகளைக்கொண்டவர். அரசியலிலும் முக்கிய அமைச்சுகளால் அலங்கரிக்கப்பட்டார். அரசியலில் அவரின் அதிகார காலம் குறுகியதாக இருந்தாலும், இன்றும் நினைத்துப் பேசுமளவிற்கும் வியந்து பார்க்குமளவிற்கும் தடம்பதித்துவிட்டுத்தான் மறைந்திருக்கிறார்.

இலங்கை அரசியல் வரலாற்றிலும் முஸ்லிம் சமூக அரசியலிலும் தனக்கான இடத்தைப் பிடித்திருக்கிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் இருந்திருக்கிறார். அவர் வளர்த்த மரத்தில்தான் பலர் அரசியல் முகவரி பெற்றிருக்கிறார்கள். அதிலும் சிலர் நோகாம நொங்கு குடிக்கிறார்கள்.

அன்று அஷ்ரப்பும் அவரோடு இணைந்து பலர் செய்த உயிர், உடமை, பொருளாதாரம் போன்ற தியாகங்களால்தான் இன்றும் இந்த இயக்கம் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல் தொய்வுநிலையை அடைந்திருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையேற்று பல சவால்களுக்கு மத்தியில் இந்த நெருக்கடியான காலகட்டத்திலும் நாட்டுக்காக - நாட்டு மக்களுக்காக - தன் சமூகத்திற்காக குரல் கொடுக்கும் தலைவராக அன்று தலைவர் அஷ்ரப் அடையாளங்காட்டிய தலைவர் ரவூப் ஹக்கீம் திகழ்கிறார்.

இன்றைய முஸ்லிம் அரசியல் தொய்வுநிலையிலிருந்து மீட்டு அடுத்த சந்ததிகளுக்கு சமூக அரசியலில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக எதிர்காலச் செயற்பாடுகளை ரவூப் ஹக்கீம் முன்னெடுக்க வேண்டுமென்பது பலரது எதிர்பார்ப்பாகும் என்பதை இந்த நாளில் நினைவுபடுத்திக் கொள்கிறோம். அஷ்ரப் என்ற விருட்சம் 22 வருடங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் எம் மனங்களில் வாழும் தலைவருக்காகப் பிரார்த்திப்போம்!

எம்.என்.எம்.யஸீர்
அறபாத் - ஓட்டமாவடி.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மறைந்து 22ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அக்கரைப்பற்று அய்னாஹ் கடற்கரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், விசேட அதிதியாக பிரபல கவிஞரும், தென் இந்திய தமிழ்த் திரைப்பட நடிகருமான வ.ஐ.ச.ஜெயபாலன் கலந்துகொள்வார். நினைவுப் பேருரையை தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நிகழ்த்தவுள்ளதோடு, "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சமகால அரசியலும்" என்ற தொனிப்பொருளில் கட்சியின் தவிசாளரும், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் உரையாற்றுவார். ஏனைய நினைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நாடெங்கிலுமிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட பருமளவிலான கட்சி அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்வார்களென கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நந்தினி சேவியர் மறைந்து ஓராண்டு நினைவு நாள் இன்று

தே. சேவியர் என்ற இயற்பெயர்கொண்ட நந்தினி சேவியர் (25 மே 1949 – 16 செப்டெம்பர் 2021) மறைந்து இன்றுடன் ஒரு வருடம் நிறைவுறுகிறது. ஈழத்துப் படைப்பாளிகளில் ஒருவர். கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனக் கட்டுரை ஆகிய துறைகளில் தமது ஆளுமையைச் செலுத்தியவர்.

சேவியர் யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகக்கொண்டவர். திருகோணமலையில் வாசித்தார் . பாடசாலைக் கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ,சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர். இலக்கியச் செயற்பாடுகளுடன் சமூகச் செயற்பாடுகளிலும் முன்நின்று உழைத்தவர்.

இலக்கியப் பங்களிப்பு

சிறுகதைத்துறையிலேயே நன்கு அறியப்பட்டவர். நந்தினி சேவியர் என்ற பெயரிலேயே அதிகமும் எழுதிவந்தார். இவருடைய பத்தி எழுத்துகள் மற்றும் கட்டுரைகள் சில வ.தேவசகாயம், தாவீது கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன. நாவல்கள் குறுநாவல்கள் கட்டுரைகள், பத்தி எழுத்துகள் ஆகியவற்றை எழுதியிருந்தாலும் அவை இன்னமும் நூல்வடிவம் பெறவில்லை. இவரின் சிறுகதைகள் மாத்திரமே இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவருடைய படைப்புகள் தாயகம், மல்லிகை, வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி, சிந்தாமணி, வீரகேசரி, தொழிலாளி, சுதந்திரன், ஈழமுரசு, ஈழநாடு ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இலங்கை வடமாகாண கல்வி அமைச்சு கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு இவர் செய்த பங்களிப்பு முக்கியமானது.

மேகங்கள், கடற்கரையில் தென்னை மரங்கள் நிற்கின்றன ஆகிய நாவல்களையும் ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள் என்ற குறுநாவலையும் எழுதியுள்ளார். ஆனால், அவை இன்னமும் பிரசுர வடிவம் பெறவில்லை.

பாடநூலில் பங்களிப்பு

2012ஆம் ஆண்டிலிருந்து தரம் - 10 தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் "நந்தினிசேவியர் சிறுகதைகள்" என்ற முருகையனின் கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது.

ஆய்வரங்கு

தமிழ்நாட்டில் செப்டெம்பர் 2000இல் காலச்சுவடும் சரிநிகரும் இணைந்து நடத்திய தமிழினி 2000 மாநாட்டில் கலந்துகொண்டு இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் மார்க்சிய இலக்கியம் என்ற கட்டுரையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

வெளிவந்த நூல்கள்

அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (சிறுதைத் தொகுப்பு) பதிப்பு 1993, வெளியீடு - தேசிய கலை இலக்கியப் பேரவை. நெல்லிமரப் பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுப்பு) பதிப்பு 2011, வெளியீடு கொடகே.

நந்தினி சேவியர் படைப்புகள், 2014 டிசம்பர், விடியல் பதிப்பகம், சென்னை.

பெற்ற கௌரவங்கள்

ஈழநாடு பத்திரிகையின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் 'மேகங்கள்' என்ற நாவல் இரண்டாம் பரிசு பெற்றது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய நாவல் போட்டியில் 'ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்' என்ற குறுநாவல் தங்கப் பதக்கத்தை முதற்பரிசாகப் பெற்றது.

1993இல் வெளிவந்த சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான முதற்பரிசை விபவி சுதந்திர இலக்கிய அமைப்பு அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நூலுக்கு வழங்கியது.

உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய 'தமிழின்பக் கண்காட்சி'யில் அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் நூலுக்கு முதற்பரிசு வழங்கியது.

இவரது இலக்கியப் பங்களிப்புக்காக 2011இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது கிடைத்தது.

2015 கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது [1]

வடமாகாண சிறந்த நூல் பரிசு, 2012 - நெல்லிமரப் பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுதி)

சாகித்திய மண்டலப் பரிசு, 2012 - நெல்லிமரப் பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுதி)

கிழக்கு மாகாண சிறந்த நூல் பரிசு (பல்துறை) - நந்தினி சேவியர் படைப்புகள்

கலாபூஷணம் விருது - 2013

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் 2014-2015ஆம் ஆண்டுக்கான "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவித்தது.


நக்கல் நமசிவாயம்
கோழி இறைச்சியின் விலை கூடியிருக்குதாம்.. முட்டை விலை கூடி கோழி விலை கூடாட்டி கோழிக்கு கௌரவப்பிரச்சினைதானே என்னங்கோ...

இன்றைய நாளில்...

★ 1956 – அவுஸ்திரேலியாவின் முதலாவது தொலைக்காட்சி சேவை டிசினன் ஆரம்பமானது.

★ 1961 – பாகிஸ்தான் அப்துஸ் சலாம் தலைமையில் விண்வெளி ஆய்வு ஆணையத்தை நிறுவியது.

★ 1963 – மலாயா கூட்டமைப்பு, சிங்கப்பூர், வடக்கு போர்னியோவின் சபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது. ஆனாலும் சிங்கப்பூர் விரைவில் விலகி தனிநாடாகியது.

★ 1970 – ஜோர்தானில் நான்கு பயணிகள் விமானங்கள் பலஸ்தீனப் போராளிகளால் கடத்தப்பட்டதையடுத்து மன்னர் உசைன் இராணுவ ஆட்சியை அறிவித்தார்.

★ 1975 – முதலாவது இடைமறித்துத் தாக்கும் போர் வானூர்தி மிக்-31 தனது முதல் பறப்பை மேற்கொண்டது.

★ 2000 – ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் ஹெலிகொப்டர் விபத்தில் பலியானார்.

★ 2002 – விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆரம்பமாகின.

முல்லைத்தீவை வந்தடைந்த "காங்கேசன்துறை தொடக்கம் ஹம்பாந்தோட்டைவரை" ஊர்திப்பேரணி

ஹம்பாந்தோட்டை வரை
KANKESANTHURAI TO HAMBANTOTA

(முல்லைத்தீவு நிருபர்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும், சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து முன்னெடுக்கும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்கக்கோரிய “காங்கேசன்துறைதொடக்கம் ஹம்பாந்தோட்டைவரை" என்னும் நாடுதழுவிய ஊர்திவழி கையெழுத்துப் போராட்டம் நேற்று (15) முல்லைத்தீவை வந்தடைந்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு - மல்லாவி, சிவன்கோவிலில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலிகளும் மேற்கொள்ளப்பட்டு இந்தக்கையெழுத்துப் போராட்டம் ஆரம்பமானது.

தொடர்ந்து மல்லாவி சிவன்கோவில், மல்லாவி நகர் உள்ளிட்ட இடங்களில் கையெழுத்து சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சந்திரலிங்கம் சுகிர்தன், மாந்தைகிழக்கு பிரதேச சபை தவிசாளர் அமிர்தலிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், சமூக ஆர்வலர் தம்பையா யோகேஸ்வரன் உள்ளிட்டவர் களுடன் பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

15.09.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	13 6257	141 38
கனேடியன் டொலர்	16 3278	171 64 0
சீன யுவான் (ரென்மின்பி)	4 4646	42 5424
யூரோ	244 4201	26 4 27
ஜப்பான் யென்	1 3771	1 48 5
சிங்கப்பூர் டொலர்	142 5 44	153 2130
ஸ்ரேலிங் பவுன்	300 3 1	317 117
சுவிஸ் பிரான்ங்	257 8762	275 5233
ஐ.அ.டொலர்	247 82 5	258 6015

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	850 3330
குவைட்	குவைட் தினார்	0,062 436
ஓமான்	ஓமான் றியால்	830 3052
கட்டார்	கட்டார் றியால்	87 38 4
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 2852
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 5658

யாழ். பல்கலைக்கழகத்தில் தியாகி திலீபனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 35ஆவது நினைவு தினம், நேற்று (15) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகம் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 9.45 மணியளவில் நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்ட இந்த நினைவேந்தலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தியாகதீபம் திலீபன் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 1987 செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உயிர்த்தியாகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்தங்கியுள்ள மலையக கல்வியை முன்னேற்றுவேன்

இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவிப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மலையக மக்களின் பின்தங்கிய கல்வியை இராஜாங்க அமைச்சை பயன்படுத்தி முன்னேற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அண்மையில் கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட அருணாச்சலம் அரவிந்தகுமார் பத்தரமுல்லையிலுள்ள செத்திரிபாயவில் சமய வழிபாடுகளையடுத்து நேற்று (14) தனது இராஜாங்க அமைச்சுக் கடமைகளை ஆவணத்தில் கையெழுத்திட்டு பொறுப்பேற்றுக்கொண்டார்.

தலவாக்கலை கதிரேசன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ முத்துசுவாமி குருக்கள் சமய வழிபாட்டை நடத்தினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், வியாழேந்திரன், தேனுக விதான கமகே, ஜானக்க வக்கும்புர, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க மற்றும் அமைச்சரின் குடும்பத்தவர்கள், அமைச்சரின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

களனி பிரதேசத்தில் நபரொருவர் சுட்டுக்கொலை

களனி பிரதேசத்தில் மோட்டார்சைக்கிளில் வருகைதந்த இருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதசாரதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் (14) இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களனி, பட்டடி சந்தி பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் கைபேசிக்கு இறுதியாக வந்த தொலைபேசி அழைப்பினூடாக சந்தேகநபரை கண்டறிவதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ஸ்கூட்டி வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளில் வருகைதந்த இருவரினால் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த சம்பந்தப்பட்ட நபர் மீது இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய, வெலேவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய மொஹமட் அரீப் மொஹமட் ஹுசேன் என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபருக்கு எதிராக மூன்று கொலைச் சம்பவங்கள் தொடர்பில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், தெல் பாலா, ஆனமாலு ரங்க மற்றும் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் உள்ளிட்ட மூவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதன் பின்னர் குறித்த நபர் ராகம வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதே உயிரிழந்துள்ளதுடன், இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் பேலியகொட வலய குற்றப்புலனாய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கலை முன்னிட்டு, நேற்று (15) பூசகர் குழந்தைவேல் சுரேந்திரனால் அக்கினிச்சட்டி மற்றும் கரகம் எடுத்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பக்த அடியார்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(படங்கள் - உடப்பு செய்தியாளர்)

அனைத்து இளைஞர் அணியின் ஒரு பகுதி அமைப்பாக

வை.எம்.எம்.ஏ. கிளை ஆரம்பித்துவைப்பு

(உக்குவெல நிருபர்)

உக்குவெலயில் இளைஞர் அமைப்பாக இயங்கிவரும் அனைத்து இளைஞர் அணியின் கிளை அமைப்பாக வை.எம்.எம்.ஏ. கிளை உத்தியோகபூர்வமாக அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்வி சமூக நற்பணிகளை மேற்கொள்ளும் பொருளாதார ரீதியாக சிரமப்படும் துறைசார்ந்த மேம்படுத்தும் உதவும் நோக்கோடும் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கோடும் இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட் ரிஸ்மி மற்றும் மாத்தளை மாவட்ட வை.எம்.எம்.ஏ. பணிப்பாளர் அல்ஹாஜ் பௌஸ் ஏ காதர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

துலைவராக சகோ அமீன், உப தலைவர்களாக எம்.யூ.எம்.ரிபாம், ஏ.ஜே.எம்.தலிப்தீன், பொருளாளராக சகோ எம்.எம்.எம்.ரிஸ்மி, செயளாளராக ஏ.ஆர்.எம்.அப்துல் ரஹீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் துண்டுப் பிரசுரம் விநியோகம்

(செ.திவாகரன்)

ஒன்றிணைந்த தொழில் சங்க மையம் மற்றும் ஐக்கிய மக்கள் இயக்கம் இணைந்து நுவரெலியா அரச தனியார் ஊழியர்களை தெளிவுபடுத்தும் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் நிகழ்வு அமைப்பின் அமைப்பாளர் பாஸ்கர் தலைமையில் நுவரெலியா நகரில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

இந்த துண்டுப் பிரசுரம் நுவரெலியா பிரதான தபாலக ஊழியர்களுக்கும் நுவரெலியா மாவட்ட செயலகம், நுவரெலியா பிரதேச செயலகம் உட்பட அரச தனியார் நிறுவனங்கள் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

இதில் 2022ஆம் ஆண்டு ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அரச, தனியார் ஊழியர்களின் சம்பள உயர்வோ, வேறு எந்தக் கொடுப்பனவோ வழங்க முன்மொழியப்படவில்லை. மாறாக, அரச ஊழியர்களின் சேவைக்காலத்தை மட்டுப்படுத்தும் திட்டமும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் வேலையும் முன்மொழியப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம்முதல் இந்த வருடம் ஜூலைவரையிலான வாழ்க்கைச் செலவுகள் 146.5 முதல் 244.4 வரை உயர்ந்துள்ளன. நாளாந்தம் உணவுப்பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. ஆனால், அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கு அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்படவில்லை. எனவே, அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். விசேட கொடுப்பனவுகளும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. நாட்டுமக்கள் பட்டினியில் வாழ்கின்றபோது அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களின் நாளாந்த செலவினம் கோடி ரூபாவாகும். ஆகவே, நாட்டுமக்களின் பிரச்சினைக்கு அரசு உடன் தீர்வை காணாவிட்டால் இந்த அரசாங்கமும் வீடு செல்ல வேண்டும் எனவும் துண்டுப் பிரசுரத்தின் மூலம் மக்களை தெளிவுபடுத்தினர்.

செலான் வங்கி - பீ.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்)
சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏல விற்பனை
செலான் வங்கி (பீ.எல்.சி.) - விஜேராம கிளை
பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

மொரட்டுவையில் தனது சொந்த வியாபாரமாக W/H 7850 என்ற பதிவு இலக்கத்தைத் தாங்கிநின்று R.D.M.D. டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் பெரும் புகழ்பெற்ற வர்த்தகரான மொரட்டுவையைச் சேர்ந்த யகந்தாவல லியனாரச்சிலாகே ரோஹன யகந்தாவல என்பவர் கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு எச்.ஜி.எஸ்.அநுராதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.08.17ஆம் திகதியிடப்பட்ட 364 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எச்.டீ.டீ.பிரேமரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.23ஆம் திகதியிடப்பட்ட 48 ஆகிய இரு முறிகளின் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால்

2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்- 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள. மொரட்டுவ மாநகர சபை எல்லை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட இலக்கம் 557 ராவத்தாவத்த கிழக்கு கிராமசேவகர் பிரிவில் கட்டுபெத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட நில உடைமை வரைபட இலக்கம் 520205இன் 15ஆம் இலக்க வளையத்தில் சித்திரித்துக் காட்டியுள்ள லொட் 0073 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு ஆறு ஒன்று (ஹெக். 0,0461) விஸ்தீரணத்தைக்கொண்ட 520205ஆம் இலக்க நில உடைமை வரைபடத்தில் உள்ளவாறான காணி.

காணிக்கும் பிரவேசிக்கும் வழி:- கொழும்பு -காலி வீதி (A2) யிலிருந்து கட்டுபெத்த சந்தி வரைக்கும் சென்று இடது பக்கத்திற்குத் திரும்பி பண்டாரநாயக்க மாவத்தையினூடாக சுமார் 80 மீற்றர் தூரம் சென்றதும் வலது கை பக்கத்தில் குறிப்பிட்ட காணி தென்படும்.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்:- 2020.01.24ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2020.10.09ஆம் திகதிய டேலி FT மற்றும் அத பத்திரிகையிலும் மற்றும் 2020.03.13ஆம் திகதிய தினக்குரல் பத்திரிகையிலும் பிரகாிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் விதம்:- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2,5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏல திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி: ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி. வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485. 011-2456479. 011-2456473.

எதுவித முனைறிவித்தலும் இன்றி மேற்படி ஏல விற்பனையை நடத்துவதற்கும்/இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர்.
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த. பனாகொட, ஹோமாகம.
தொலைபேசிஇலக்கம்: 071 4318252.

தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று (15) யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின.

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த காலை 9.45 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாவீரர்களின் பெற்றோரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக்கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து திலீபன் உயிர்நீத்தார்.

சாவகச்சேரியில் கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தி போராட்டம்

100 Days Activism th Day
கௌரவமான உரி... கூடிய அரசியல் தீர்வு வேண்டும்
100 Days Activism 46th Day
NECC

(சாவகச்சேரி நிருபர்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வை வழங்கவேண்டுமென வலியுறுத்தி நேற்று (15) சாவகச்சேரி, மகிழங்கேணிக் கிராமத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்புப் போராட்ட நிகழ்வில் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் கலந்துகொண்டு சிறுபான்மையின மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்.

மேலும், நிகழ்வில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் செயற்பாட்டாளர் றொஹான், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சுபோதினி, சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு கிராம இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத மக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியா பிரதேச செயலகத்தால் குருதிக்கொடை

(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டையடுத்து வவுனியா பிரதேச செயலகத்தால் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (14) இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலையில் சில வகை குருதிகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இந்நிலையில், இவ்வகையான குருதிகளை வைத்தியசாலைக்கு வழங்கும் செயற்பாட்டை வவுனியா பிரதேச செயலகம் முன்மாதிரியாக முன்னெடுத்திருந்தது.

இதன்போது வவுனியா பிரசே செயலாளர் நா.கமலதாசன் குருதி கொடை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், குறித்த பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் தாமாக முன்வந்து குருதியை வழங்கியிருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் செய்யாதீர்!

மாவீரர்களின் பெற்றோர் சார்பில் அறிவிலியின் தந்தை கோரிக்கை

(யாழ். நிருபர்)

நினைவேந்தல் நிகழ்வுகளில் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் - என அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பில் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் அறிக்கை ஒன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமானவேளை அங்கு வந்திருந்த அரசியல் கட்சி ஒன்றைச் சார்ந்தவர்கள் பிற கட்சியினருடன் முரண்பாடுகளை ஏற்படுத்தும் முகமாக செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், அங்கிருத்தவர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், அது தொடர்பில் அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஊடக அறிக்கை ஒன்றினை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தியாகதிலீபனின்நினைவேந்தல் மட்டுமல்ல, எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம்.

இந்த ஆண்டின் திலீபன் நினைவு ஆரம்ப நிகழ்வு தொடங்கும் முன்னர் பிறிதொரு அணியினரை சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகிறது.

இவர் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டாளரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன் மாஸ்டரிடம் இந் நிகழ்வை பொதுநிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்னவென்று கேட்டேன். எதுவும் இல்லை என பதிலளித்தார். அது திருப்தி அளித்தது.

அந்த நம்பிக்கையை சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி சுகாஷ் இன்றைய தினம் (15ஆம் திகதி) நடந்துகொண்டார்.

ஏற்கனவே மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளை தாக்கும் களமாக பயன்படுத்த வேண்டாம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதனை கடைப்பிடிப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார்.

எனினும் கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சாடியமை பற்றி செய்தி பத்திரிகையில் வெளியானபோது மிகவும் வேதனைப்பட்டேன். அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக பொன் மாஸ்டரை சந்தித்து உரையாடினேன்.

எனவே, இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்து கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகிறேன் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் கைது

(மஸ்கெலியா நிருபர்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்ரி தோட்டப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்க்கு நீரை வழங்கும் கெசல்கமு ஓயாவில் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்றி தோட்டப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவேளை, நோர்வூட் பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது. இதனையடுத்து நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் குறித்த இடத்தைச் சுற்றிவளைத்து அறுவரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட அறுவரும் 40-55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என்றும் குறித்த அறுவரும் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் நேற்றுமுன்தினம் மாலையே விடுதலை செய்யபட்ட நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வால் காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அதிகளவில் சகதி கலந்த மண் சென்று நிறைவதால் நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு குறைந்துவருவதாக நீர்மின் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

கண்டி வலய தமிழ்மொழி தினப் போட்டியில் பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள், முஸ்லிம் நிகழ்ச்சி கதம்பத்தில் இரண்டாவது இடம் பெற்றுக்கொண்டபோது பங்குகொண்ட பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகளுடன், அதிபர் திருமதி சிஹானா ரஹீம் பொறுப்பாசிரியர் திருமதி அரபா மன்சூர் ஆகியோரை படங்களில் காணலாம்.
(படம் - இக்பால் அலி)

கண்டி ஸஹிரா ஆண்கள் பாடசாலை மாணவன் சமீர் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மிகச்சிறந்த சித்தியைப் பெற்று 15 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை பல்கலைக்கழகம் செல்லவுள்ளமையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
(படம் - இக்பால் அலி)

மக்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றாது வெள்ளை யானையாக மாறியுள்ள உள்ளூராட்சி மன்றங்கள்

நிலைமை தொடர்ந்தால் மக்கள் பிரதிநிதிகள் ஓரங்கட்டப்படும் நிலை உருவாகும் என்கிறார் மாத்தளை மாநகர சபை உறுப்பினர் அஷ்ரப்

(மாத்தளை நிருபர்)

''பொதுமக்களின் அடிப்படை மற்றும் அவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களால் பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமல் அவை வெள்ளை யானையாக மாறிவிட்டுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விடயம். எதிர்காலத்தில் பொதுமக்களால் உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள் ஓரங்கட்டப்படும் நிலை உருவாகலாம். எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களின் தேவைகளைக் கருதி செயற்படுவது காலத்தின் தேவையாகும்'' - இவ்வாறு மாத்தளை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.அஷ்ரப் தெரிவித்தார்.

மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்ட நோக்கம் மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிட மக்களிடமிருந்து திரட்டப்படும் வரி நிதிகளினால் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதே. ஆனால், இன்று இவை தலைகீழாக மாறிவிட்டன.

மாத்தளை மாநகர சபையை எடுத்துக் கொண்டால் மாத்தளை மாநகர குடியிருப்பாளர்களின் தேவைகள், அவர்களின் அடிப்படை வசதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆனால், அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகள் தாமதமின்றி அறவிடப்படுகின்றன. வரி செலுத்தத் தவறும் குடியிருப்பாளர்கள், ஹோட்டல் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களின் உடைமைகள் மாநகர சபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டு அவர்களிடமிருந்து பலவந்தமான முறையில் வரி வசூலிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் மனிதாபிமானமற்ற நிலையிலும் சட்டத்துக்கு முரணான நிலையிலும் இவை வசூலிக்கப்படுகின்றன. இதனால் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் வர்த்தகர்கள், மாநகர சபை மீது மிகவும் வெறுப்புணர்ச்சியுடன் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இந்நிலையை மாற்றி மக்களுக்காக உருவாக்கப்பட்ட எமது மாநகர சபை மக்களின் தேவைகளைக் கண்டறிந்து செயற்பட வேண்டும்.

மக்கள் எம்மை இந்த மன்றத்துக்கு அனுப்பி வைத்த முக்கிய நோக்கம் அவர்களின் தேவைகளை மற்றும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிகொள்ள அவர்களின் பிரதிநிதிகளாகவே எங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால், மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடிய நாம் அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கின்றோமா என்பதையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களின் வரிப்பணத்தில் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதும் மாநகர சபை உறுப்பினர்கள் என்ற வரப்பிசாதங்களை அனுபவிப்பதென்பது மாத்திரம் எமது குறிக்கோளாக இருக்க முடியாது.

மக்கள் எந்த நோக்கத்திற்காக எம்மை அவர்களின் பிதிநிதிகளாக இந்த சபைக்கு அனுப்பிவைத்தார்களோ அவர்களின் நோக்கம் நிறைவேறும் நோக்குடன் நாம் செயற்பட வேண்டும். இல்லாவிடின் என்றோ ஒருநாள் இம்மாநகர மக்கள் எமக்கும் இந்த சபைக்கும் எதிராக நிச்சயம் கிழர்ந்து எழும்புவார்கள் அந்நாள் நிச்சயம் பொதுமக்களுக்கு நாம் பதில் கொடுக்கவேண்டிய நாளாக இருக்கும்.''

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஹட்டன் 'நைட்டிங்கேல்' தாதியர் கல்லூரியில் பயிற்சிகளை முடித்தவர்கள் கௌரவிப்பு

செ.திவாகரன்

ஹட்டன் 'நைட்டிங்கேல்' தாதியர் கல்லூரியில் 25ஆவது தாதியர் பயிற்சிகளை முடித்து குழுவாக வெளியேறும் தமிழ்ப் பிரிவு மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி தொப்பி அணிவித்து பயிற்சிக்கான 5 சான்றிதழ்களுடன் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் நியமனம் பெற்ற 20 மாணவிகளுக்களை கொளரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இவ்வாறு தாதியர்களாக பயிற்சிபெற்று வெளியேறும் 20 யுவதிகள் தாதியர் பாடசாலைகளில் ஆறு மாதங்களும், வைத்தியசாலைகளில் மூன்று மாதங்களும் நடைமுறை பயிற்சிகளைப் பெற்றதாகவும், இதற்காக கொழும்பு, கண்டி போன்ற பிரதேசங் களிலுள்ள அதிசிறந்த ஏழு வைத்தியசாலைகளில் தாதியர் பயிற்சி பெற்றதாகவும் நைட்டிங்கேல் தாதியர் பாடசாலையின் பணிப்பாளர் சுபோதினி தெரிவித்தார்.

பல்கலைக்கழகம் செல்ல எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிகளில் தனித்தனியே நடத்தப்பட்ட திசைமுக செயலமர்வு நேற்றுமுன்தினம் (14) பசறை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஊவா- வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான நுவன் லியனகே, இந்திக்க தென்னகோன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

(படங்கள் - பசறை நிருபர்)

இலங்கையை கடல்சார் வர்த்தகத்தின் மையமாக மாற்றுவோம்!

தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிசெய்து, உலகிற்குத் திறந்துவிடுவதன் மூலம் பலம்வாய்ந்த ஆசியாவை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சுதந்திரமான கடற்பயணத்தை உறுதிப்படுத்தி இலங்கையை கடல்சார் வர்த்தக கேந்திரமாக நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. அந்த விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி பாதுகாப்புக் கல்லூரியில் கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

பின்னர் சிறப்பு விருந்தினர் புத்தகத்தில் நினைவுக்குறிப்பொன்றையும் இட்டார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் சிறந்ததொரு பாதுகாப்பு முறைமை இல்லை என்றால் எமது எதிர்காலம் பாதிக்கப்படும். உலக மற்றும் பூகோள அரசியலின் நிலைமை மிகவும் மோசமாகி விடும். அது நாட்டுக்கு நல்லதல்ல.

முப்படையினர், பொலிஸார் மற்றும் அரச துறையில் உயர் பதவிகளை வகிக்கும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு தேசிய பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள் குறித்த கல்வியை வழங்கும் நோக்கத்துடன் நாட்டில் நிறுவப்பட்ட முதலாவது ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இதுவாகும்.

தேசிய மட்டத் தேவைகளை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்பு, இராஜதந்திரம் மற்றும் பொதுக் கொள்கை ஆகிய துறைகளில் மூலோபாய சிந்தனையாளர்கள் மற்றும் தலைவர்களை உருவாக்குவது இந்த தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் நோக்கமாகும் - என்றார்.

2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா இதுவாகும், மேலும் இந்த நிறுவனத்தின் பாடநெறிகளைப் பூர்த்திசெய்த 31 பேருக்கு ஜனாதிபதி பட்டங்களை வழங்கினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, பொலிஸ் மா அதிபர் சி. டி.விக்ரமரத்ன, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் இராணுவ நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, தேசிய வரவு-செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சஞ்சீவனி வீரசேகர ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஓமானுக்கான புதிய இலங்கைத் தூதுவர் கௌரவிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை அரசாங்கத்தினால் ஓமான் நாட்டுக்கு புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட ஏ.பசருல்லாக்கானை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) கொழும்பு, மந்தரினா ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வை லேக்ஹவுஸ் டெயிலி நியூஸ் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், கொழும்பு ரைம்ஸ் ஸ்தாபகர், அரப் நியூஸ் இலங்கை ஊடகவியலாளருமான மொஹமட் ரசுல்டீன் ஒழுங்குசெய்திருந்தார்.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்துகொண்டனர். கொரியா நாட்டுக்கான தூதுவர் வூன்ஜிங் ஜோன்ங், பங்களதேஷ் நாட்டுக்கான தூதுவர் தாரிக் ஆரிபூல் இஸ்லாம், துருக்கி நாட்டின் தூதுவர் ரைமத், சேகர் சைகுலு, பலஸ்தீன் நாட்டுக்கான தூதுவர் கலாநிதி சுகைர் ஹம்துல்லா செய்யத் மற்றும் தூதுவர் ஆலயத்தின் கவுன்சிலர்களான அமெரிக்க தூதுவராலயத்தின் பிரதி பிரதம மிசன், டக்லஸ் சோனேக், இந்திய உயர்ஸ்தானியரக கவுன்சிலர் பானு பிரஹாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

ஓமான் நாட்டில் 35 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுகின்றார்கள். இலங்கை - ஓமான் நாடுகளுக்கிடையில கடந்த 40 வருட கால உறவுகளை நாம் கொண்டாடினோம்.

அங்கு குறிபபிட்டு இந்நிகழ்வை ஏற்பாடு செய்த மொஹமட் ரசுல்டீன் றியாத் நகரில் கவுன்சிலர் இருக்கும்போது அவர் அங்கு கடமையாற்றினார். அதிலிருந்து எங்களது உறவு இருந்துவருகின்றதாகவும் இந்த ஏற்பாட்டினை ஒழுங்குசெய்தமைக்கு ரசுல்டீனுக்கு நன்றியை தெரிவிக்கின்றோம் - என்றார்.

பொருளாதாரம் பற்றிய புரிதல் இல்லாததால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது

மக்கள் பேரவையின் ஒன்றுகூடலில் சஜித் சுட்டிக்காட்டு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலை கடந்த இரண்டரை வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒன்றுபோலவே, இது மக்களின் நம்பிக்கையை சிதைக்கும் பிரச்சினையாகும். முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சராகப் பணிபுரிந்த ஏழு மூளைகள் இருப்பதாக பெருமை பாடிய நபரும் கூட, பொருளாதாரம் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் அடிமைகளாக செயற்பட்டார். இதன் பிரதிபலனாக நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மக்கள் பேரவையின் ஒன்றுகூடல் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்ற நிதிக்குழுக் கூடியபோது, அரசாங்கத்தின் முன்னாள் முக்கிய ஸ்தர்களான பி.பி.ஜயசுந்தர, அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் சுபீட்சத்தின் தெ ாலை நோக்குக்கு அமைவாகவும், அமைச்சரவையின் அங்கீகாரத்துடனுமே வரிச்சலுகைகள் வழங்கப்பட்டதாக தெரிவித்ததாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், இரண்டரை வருடங்கள் நாட்டை ஆண்ட இவர்களுக்கு பொருளாதாரம் பற்றிய சரியான அறிவுகூட இருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இதன் காரணமாக நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர் போலவே தொழில்முனைவோர்கள் என அனைத்துத் துறையினரும் வீழ்ச்சியடைந்துள்ளனர். இதன் காரணமாக வங்கிக் கட்டமைப்பும் வீழ்ச்சியடையும் அபாயத்தை எதிர்நோக்குகின்றது . நாட்டைக் காப்பாற்ற கெ ாண்டுவந்த மாவீரர்களும் ஹீரோக்களும் நாட்டை வக்குரோத்தாக்கிவிட்டார்கள்.

எனவே, எதிர்காலத்தில் எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் விஞ் ஞாபனக் கொள்கை தொகுப்பை முன்வைக்கும்போது, அது எதிர்காலத்தில் எவ்வாறு பாதிக்கும் என்பதை நாட்டு மக்களைப் போலவே ஒவ்வொரு தனிமனிதனும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சோடிக்கப்பட்ட வீரத்தனம் பற்றி சிந்திக்காமல் நாட்டின் பொருளாதாரத்தை வழிநடத்தக்கூடிய ஒருவரை நியமிக்க வேண்டும் - என்றார்.

18 பேருக்கு கொரோனா

நாட்டில் நேற்று முன்தினம் (14) 18 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரையில் ஒட்டுமொத்தமாக 6 இலட்சத்து 70 ஆயிரத்து 519 கொரோனா நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

கொரோனா தொற்று பரவும் அச்சுறுத்தல் நிலை நாட்டில் தொடர்ந்து இருப்பதால் சுகாதார வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர்.

டோஹாவில் ‘இலங்கையை ஆராயுங்கள்’ – கட்டார் மெனாசா 2022, ஆண்டுகளின் கலாசார விழா

Qatar
MENASA
Explore
Srilanka

“இலங்கையை ஆராயுங்கள்'' - கட்டார் மெனாசா 2022, ஆண்டுகளின் கலாசாரம் என்ற தலைப்பில் இரண்டு நாள் இலங்கை கலாசார விழா கடந்த 09ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை டோஹா - கட்டாரின் கல்வி நகரத்தில் கொண்டாடப்பட்டது. டோஹாவிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சமூக அமைப்புகளுடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையின் கலாசாரம், கலைகள், கைவினைப் பொருட்கள், வரலாறு, மதம், இலங்கைத் தேயிலைக் கலாசாரம் மற்றும் இலங்கையின் வாழ்க்கை முறை மற்றும் திறன்கள் போன்றவற்றை கட்டார் அரச மக்களுக்கும் புலம்பெயர் சமூகத்தினருக்கும் வெளிப்படுத்த இந்த நிகழ்வு இலங்கைக்கு ஒரு முக்கியமான வாய்ப்பாக அமைந்தது.

இலங்கையின் பாரம்பரிய நடனங்கள் மற்றும் டோஹாவிலுள்ள ஸ்டாஃபோர்ட் ஸ்ரீ லங்கா பாடசாலை டோஹா மற்றும் டினு நடன அகடமி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட டிரம் நிகழ்ச்சிகள் நிகழ்வைக் கவர்ந்ததுடன், கண்டிய நடனம், பிரஷஷ்டி நடனம், அவ்ருது நடனம், நாட்டுப்புற நடனம் போன்ற பல்வேறு வகையான மயக்கும் நிகழ்ச்சிகளால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பார்வையாளர்கள் கவரப்பட்டனர். இத்திரு விழாவின் மற்றுமொரு முக்கிய சிறப்பம்சமாக, கண்டி, இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க நான்கு கலாசாரங்களின் மணப்பெண்களின் சித்திரிப்பும் இடம்பெற்றது.

இலங்கையின் கலைகள் மற்றும் கைவினைப் பொருட்கள், உணவு மற்றும் சிலோன் தேயிலை ஆகியவற்றை காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் பல இலங்கைக் கூடங்கள் அந்த இடத்தில் அமைக்கப்பட்டன. இலங்கையின் கைவினைப் பொருட்கள், பட்டிக்குகள், பல்வேறு பித்தளைப் பொருட்கள் மற்றும் முகமூடிகள் ஆகியவை அங்காடிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. “கமே கடே”இல் இலங்கையின் பல்வேறு பாரம்பரிய உணவு வகைகள் பார்வையாளர்களுக்கு பரிமாறப்பட்டன. உலகத்தரம் வாய்ந்த ஆரோக்கிய ஓய்வு விடுதிகள், வரலாற்று மற்றும் சமகால அதிசயங்கள், உண்மையான உணவு வகைகள், இயற்கை மற்றும் செழுமையான கலாசாரத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட தனித்துவமான ஆயுர்வேத மருத்துவ முறையுடன் இலங்கையை ஆரோக்கியமான பயண இடமாக ஊக்குவிக்கும் நிகழ்வில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஊக்குவிக்கப்பட்டது.

கத்தார் அருங்காட்சியகங்கள் மற்றும் கட்டார் அறக்கட்டளையின் உதவி மற்றும் வழிகாட்டுதலுடன், கட்டார் அருங்காட்சியகங்களின் தலைவரான ஷேய்கா அல்-மயாசா பின்த் ஹமத் பின் கலீபா அல்தானியின் தலைமையில் உருவாக்கப்பட்ட ‘ஆண்டுகளின் கலாச்சாரம்’ என்ற வருடாந்த முன்முயற்சியின்பேரில் இந்தக் கலாசார விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

சர்வதேச கலாசாரப் பரிமாற்ற நிகழ்வான ‘ஆண்டுகளின் கலாசாரம்’, நாடுகளுக்கும் அதன் மக்களுக்கும் இடையிலான புரிதலை ஆழமாக்குகிறது. அதன் 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், 2022ஆம் ஆண்டு ‘ஆண்டுகளின் கலாசாரம்’ மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவில் (மெனாசா) நிகழ்ச்சிகளை வழங்குகின்றது. மெனாசாவில் கட்டார் முழுப் பகுதியுடனும் கூட்டுச்சேர்வது இதுவே முதல் முறையாகும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கட்டார் கால்பந்து சங்கம், கட்டார் அறக்கட்டளை, கட்டார் அருங்காட்சியகங்கள், பங்கேற்கும் நாடுகளின் டோஹாவிலுள்ள தூதரகங்களின் உதவியுடன் கட்டாரில் உள்ள முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து கட்டார்-மெனாசா ஆண்டுகளின் கலாசாரம் 2022 உருவாக்கப்பட்டது.

இவ்விழாவில் தூதுவர் எம். மஃபாஸ் மொஹிதீன் தனது முக்கிய உரையில், கட்டாருக்கும் இலங்கைக்கும் இடையில் இரு நாடுகளின் அரசியல் உறவுகளுடன் சுமுகமாக நிலவும் நீண்டகால நட்புறவு குறித்து பேசினார். மக்களை நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும், உரையாடலை ஊக்குவிப்பதற்கும், நாடுகளுக்கிடையிலான புரிதலை ஆழப்படுத்துவதற்கும் கலாசாரம் மிகவும் பயனுள்ள கருவிகளில் ஒன்றாகும் என மேலும் எடுத்துரைத்த தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள இருதரப்பு உறவுகள் இருதரப்பு நலனுக்காக இந்தக் கலாசார ஒத்துழைப்பின் மூலம் மேலும் மேம்படுத்தப்படும் - என்றார்.

திகதி 14.09.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4878
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 19,605,582.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 8 0 4 6 3 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3120
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,367,440.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 36 48 50 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,319,163.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1333
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,784,880.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 5 0 3 0 4 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,693,190.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 908
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,408,140.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 06 14 37 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 125,532,833.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 187
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,984,680.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 33 41 49 53 விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,686,721.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1226
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,070,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 270,482,202.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் நம்பர் 11 வெற்றி எண்கள் 14 39 59 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றிய பவர் பிளயர் அணி

(எம்.என்.எம்.அப்ராஸ், யூ.கே.காலித்தீன்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற அணிக்கு 10 ஓவர்கள்கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில் பவர் பிளாஸ்டர் 89/91 அணியை வீழ்த்தி பவர் பிளயர் அணி 79 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் பிளயர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 114 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பவர் பிளாஸ்டர் அணி 7 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 35 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இப்போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக பவர் பிளயர் அணியின் தாரிக் தெரிவானார். இறுதி நிகழ்வுக்கு கல்லூரியின் முதல்வர் எம்.ஐ.ஜாபீர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.ரஸ்மி ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் சாதனை

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாணமட்ட பாடசாலை 2022 விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மட்/மமே/அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் சாதனை படைத்தது.

பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மேற்கு வலய பாடசாலையாக உள்ள அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தமை தொடர்பாக வித்தியாலய அதிபர் க.அரசரெத்தினம் கருத்து கூறுகையில்,

எமது பாடசாலை மாணவிகளின் திறமையை இட்டு மிகவும் பூரிப்படையும் இவ்வேளையில், அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

இலங்கை மண்ணில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்த இந்தியா

இலங்கையில் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்ட தெற்காசிய உதைபந்து சம்மேளன சம்பியன்ஷிப் தொடரில் இந்திய அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நேபாளம் - இந்திய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியின் முதல் பாதி நிறைவில் இந்திய அணி இரண்டு கோல்களால் முன்னிலை பெற்றது. மீண்டும் இரண்டாவது பாதியிலும் இரு கோல்களை போட்டு இந்திய அணி இறுதியில் 4-0 என்ற கோல்கள் அடிப்படையில் தொடரில் சம்பியன்களாக மகுடம் சூடிக்கொண்டது.

SAFF U17 CHAMPIONSHIP | SRI LANKA 2022
CHAMPIONS

மஹேலவுக்கு உயர் பொறுப்பு

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராகக் கடமையாற்றிவந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தனவுக்கு புதிய பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, தொழிலதிபர் முகேஷ் அம்பானிக்கு மும்பை இந்தியன்ஸ் மட்டுமன்றி, தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள 20 ஓவர் கிரிக்கெட் போட்டிக்கான எம்.ஐ.கேப்டவுன் அணியும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கவுள்ள பிரிமீயர் லீக் 20 ஓவர் போட்டிக்கான எம்.ஐ. எமிரேட்ஸ் ஆகிய அணிகளும் சொந்தமாக உள்ளன. உலகளவிலான இந்த மூன்று அணிகளையும் ஒருங்கிணைத்து அதற்குரிய உயர் செயற்பாட்டுத் தலைவராக ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று அணிகளின் வளர்ச்சிக்கு வகுக்கப்படும் திட்டமிடுதலில் ஜெயவர்தன முக்கிய பங்காற்றுவார். அத்துடன், ஒவ்வொரு அணிகளின் பயிற்சியாளர், உதவி பயிற்சியாளர்களின் செயல்பாடுகளை கவனித்து தகுந்த ஆலோசனைகளை வழங்குவார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவுப் பாலமாக பரிணமித்துள்ள கூட்டுறவுத்துறை

Selected villages in Ampara
V4U UK
KALMUNAI AMPARA
CO-OPRATIVE
AND CREDIT
UNION LTD

(நூருல் ஹுதா உமர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவுப் பாலமாக கூட்டுறவுத்துறை தற்போது பரிணமித்துள்ளது - என்று கல்முனை, அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

பொருத்தமான சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தை காரைதீவு பிரதேசத்தில் புனரமைப்பதற்கான முன்னோடிக் கூட்டம் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. இதில் சமாச தலைவர் எஸ்.லோகநாதன் மற்றும் உப தலைவர் ரீ.ரூபாகரன் ஆகியோருடன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறுமுகம் நடராசசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர். சமாச தலைவர் லோகநாதன் இங்கு மேலும் பேசியவை வருமாறு,

"புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகள் வடமாகாணத்தில் ஏராளமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தற்போது கிழக்கு மாகாணத்திலும் கூடுதலான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள தொடங்கியுள்ளனர். குறிப்பாக, நெதர்லாந்து நாட்டின் மனிதநேய கூட்டுறவுச் சங்கத்தின் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்களில் பல வேலைத்திட்டங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நாவிதன்வெளி, பாண்டிருப்பு, மல்வத்தை, மல்லிகைத்தீவு போன்ற கிராமங்களை உதாரணத்துக்கு சொல்ல முடியும். விவசாயம், நெசவு, வீட்டுத்தோட்டம், மீன்பிடி போன்ற சுயதொழில் முயற்சிகள் சார்ந்து ஊக்குவிப்புகளை மேற்கொள்கின்றனர். காரைதீவு பிரதேசத்தில் மீனவர்களுக்கான தொழில்வாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சமாசத்தின் தலைவர் என்கிற வகையில் அவர்களுடைய நம்பிக்கையை நான் வென்று இவ்வேலைத்திட்டங்கள் சரியாகவும், முறையாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துபவனாக உள்ளேன்.

அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்குவார்கள். வாக்குகளைப் பெற்றுச்சென்று விடுவார்கள். அவர்கள் தேர்தல்களில் வென்று சுகபோகங்களை அனுபவிப்பார்கள். மீண்டும் இன்னொரு தேர்தலுக்கு வருவார்கள். பாவம் மக்கள். ஆனால், நாம் அவ்வாறானவர்கள் அல்லர் - என்றார்.

திருமலை சுவீட் கிட்ஸ் பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெள்ளைமணல் நீரோட்டு முனை சுவீட் கிட்ஸ் பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை மற்றும் கைப்பணி கண்காட்சியும் நேற்று (15) இடம்பெற்றன.

குறித்த சந்தை நிகழ்வானது பாலர் பாடசாலையின் ஆசிரியை எம்.ஐ.இப்திகா பேகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சிறுவர்களின் மூலமாக சிறிய வகை பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் என பல உற்பத்திகளைக் கொண்டதுமான பொருட்களைக் காட்சிப்படுத்தினர்.

இதில் பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர், தனியார் நிறுவன தேசிய பணிப்பாளர் ஏ.ஹிதாயத்துள்ளா, சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் கே.அமுதியா உட்பட பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

கோட்டைக்கல்லாறு பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி

(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் ஆரம்ப செயற்றிட்டம் வித்தியாலய அதிபர் க.செல்வராஜா தலைமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் போசாக்கினை மேம்படுத்தும் வகையில் இந்த இலைக்கஞ்சி வழங்கப்படுகின்றது. களுவாஞ்சிக்குடி சூரியா அரிசி ஆலை அனுசரணையில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்களிப்பில் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்றுதொடக்கம் தரம் ஐந்துவரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக இலைக்கஞ்சி வழங்கப்பட்டது. இக்கஞ்சியின் உள்ளீடுகளாக வல்லாரை, முருங்கை இலை, பொன்னாங்கன்னி, தூதுவளை, முல்லை போன்ற ஆரோக்கியமான இலைகள் போடப்பட்டு சுவையான கஞ்சி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூரில் கலைமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

(பொலிவேரியன் நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வருகின்ற கலை மன்றங்களின் செயற்பாட்டை இன்னும் மேலோங்கச் செய்வதற்காக கலைமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக்கின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப், நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர் ஜெஸான், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் சீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடல் கல்முனை வடக்கு, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய தமிழ்பேசும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்குகின்ற கலை மன்ற உறுப்பினர்கள் 50இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் கலை மன்றங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும், அதற்கு எதிர்காலத்தில் எவ்வாறான உதவிகளை திணைக்களம் செய்வதற்கு எதிர்பார்த்திருக்கின்றது. செயற்பாடுகள் தொடர்பாக திணைக்கள உத்தியோகத்தர்களின் மேற்பார்வை, இவை தொடர்பாக மாகாணப் பணிப்பாளரினால் முழுமையான விளக்கமளிக்கப்பட்டன. அத்துடன், வருகை தந்த கலை மன்ற உறுப்பினர்கள் தங்களது கலை மன்ற செயற்பாடுகள் தொடர்பாகவும் அதற்குத் தேவையான நிதிசார், பொருட்கள் விடயமாகவும் தங்களது கடந்தகால செயற்பாடுகள் பற்றியும் மிகவும் காத்திரமான கருத்துகளை முன்வைத்தனர்.

முடியுமான உதவிகளை திணைக்களம் செய்யும். அவசரமாக எதனையும் செய்ய முடியாதிருந்தாலும் எதிர்காலத்தில் கலை மன்றங்கள் உறங்குகின்ற நிலையைத் தவிர்த்து செயற்படுகின்ற ஒரே விடயத்துக்கு நாம் வர வேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் ஒத்துழைத்தால் எங்கள் மாகாணத்திலுள்ள பாரம்பரிய கலை, கலாசார விடயங்களைப் பேணிப் பாதுகாக்க கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்த செயற்பாடுகளைப்போன்று தொடர்ந்தும் இன்னும் சிறப்பாக மேற்கொள்வதினூடாக எதிர்கால சந்ததியினருக்கும் அந்த விடயங்களை நாங்கள் முன்னளிப்பு செய்ய முடியும் என்றும் மாகாணப் பணிப்பாளர் தனதுரையில் விரிவாகப் பேசினார்.

களுவாஞ்சிக்குடியில் 'உள்ளம்' நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

(கல்லடி நிருபர்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு நிறைவின் 'உள்ளம்' சிறப்பு மலர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (14) காலை பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அதிதிகள் உரைகள் இடம்பெற்றன.

அதனைத்தொடர்ந்து 'உள்ளம்' சிறப்பு மலர் அதிதிகளின் கரங்களினால் வெளியிடப்பட்டது.

இந்நூலானது பாடசாலையின் சிறப்பு விடயங்கள் மற்றும் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரையான பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள், விளையாட்டுத்துறை செயற்பாடுகள் மற்றும் பாடசாலை வளர்ச்சி பற்றிய பல விடயங்களைக்கொண்டதாக இந்த நூல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி, பாடசாலை பழைய மாணவர்கள் மற்றும் தற்போதுள்ள மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கடும் வரட்சியால் பொத்துவில் விவசாயிகள் பெரும் பாதிப்பு

(நிந்தவூர் நிருபர்)

பொத்துவில் பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பிரதேச மக்களின் ஜீவனோபாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை நிறைவடைந்த நிலையில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மிகவும் வறுமையான நிலையில் வாழும் பொத்துவில், கோமாரி, ரொட்டுக்கல், ஊரணி, ஹிஜ்ரா நகர் மற்றும் இன்ஸ்பெக்டர் ஏற்றம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சி காரணமாக புல், பூண்டுகள், செடிகள் மற்றும் பயிர்கள் வாடி வதங்கி காணப்படுவதுடன் புற்தரைகள் வரண்டுள்ளதால் கால்நடைகள் உண்ண உணவின்றியும் குடிநீருக்காக அலைந்து திரியும் நிலையும் தோன்றியுள்ளது.

சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

Stop Harassin
Women Human
Defenders

SriLanka State!
Stop Intimidating Human Rights
Defenders in North and East SriLan

(வெல்லாவெளி நிருபர்)

வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் அமைப்புகளின் அலுவலகங்கள் உடைக்கப்பட்டு முக்கிய ஆவணங்கள் எடுத்துச்செல்லப்படுதல் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு எதிரான மாபெரும் கவனயீர்ப்பு கண்டனப் போராட்டம் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கண்டுமணி லவகுசராசாவின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஒன்றிணைந்த சிவில் செயற்பாட்டாளர் அமைப்பின் தலைவர் சபாரெத்தினம் சிவயோகநாதன், மீனவர் அமைப்புகளின் பிரநிதிகள், பெண்கள், பாதிக்கப்பட்ட மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலும் ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் திட்டமிட்ட வகையில் அச்சுறுத்தப்படுவதும், தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதும், அவர்களை பின்தொடர்வதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வேளையில் அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உரிமை தொடர்பாக பணியாற்றுகின்ற சிவில் அமைப்புகள், ஊடகவியலாளர்கள், மற்றும் கடந்த மூன்று தசாப்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்ச்சியான கண்காணிப்பிற்குள்ளாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி, சிவில் அமைப்புகளின் அலுவலகங்கள் உடைக்கப்பட்டு முக்கியமான ஆவணங்கள் எடுத்துச்செல்லப்படுகின்ற நிலைமைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிக்கின்றன.

இதனை நிறுத்தக்கோரி இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "பெண் சிவில் செயற்பாட்டாளர்களை தொல்லைப்படுத்தும் அச்சுறுத்தலை நிறுத்து, பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி அவர்களை கைதுசெய்வதை நிறுத்து, உலக நாடுகளில் பேணப்படும் மனித உரிமைகள் பேணலை ஸ்ரீலங்காவில் அரசே நடைமுறைப்படுத்து, எங்கே மனித உரிமை பேணப்படுகின்றது? என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோக அட்டைகளை தாங்கியவாறு கோரிக்கையை முன்வைத்தார்கள்.

இவ்வாறான அசம்பாவிதங்கள், அநீதிகள் சிவில் அமைப்புகளுக்கோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ எதிர்காலத்தில் இடம்பெறக்கூடாது என்பதை வலியுறுத்தி நேற்று முன்தினம் (14) காலை 10 மணியளவில் வடக்கு, கிழக்கிலுள்ள 08 மாவட்டங்களிலும் கவனயீர்ப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

இதன்பின்பு குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளால் மட்டக்களப்பு பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலுள்ள உத்தியோகத்தரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

உதைபந்தாட்டப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவான கட்டுமுறிவுக்குளம் அரசினர் பாடசாலை

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமத்தில் அமைந்துள்ள கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக விளையாட்டு வீரர்களின் திறமையின் வெளிப்பாட்டினால் கட்டுமுறிவுக்குளம் பாடசாலையை அனைவரும் திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தற்போது மாறியுள்ளது.

கல்குடா கல்வி வலய வாகரைக் கோட்டத்திற்குப்பட்ட கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து 17 வயதுக்குப்பட்ட பெண்கள் பிரிவில் உதைபந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டம் தெரிவாகியுள்ளனர்.

குறித்த பாடசாலையானது மிக மிக பின்தங்கிய பாடசாலையாக காணப்படுவதுடன், கதிரவெளி பிரதான வீதியிலிருந்து சுமார் 20 கிலோமீற்றருக்கு அப்பால் காடுகள் நிறைந்ததொரு பகுதிக்கு எல்லையில் அமைந்துள்ள பாடசாலையில் இருந்து உதைபந்தாட்டப் போட்டியில் வலயம் மற்றும் மாகாண மட்டத்திலும் முதலாமிடம் பெற்று தேசியத்தில் கால்தடம் பதிக்கவுள்ளனர்.

இப்படியானதொரு கிராமத்திலுள்ள பாடசாலையிலிருந்து உதைபந்தாட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு இதுவரைக்கும் நிரந்தர உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் இல்லாமலே இவ்வாறு தேசியமட்டம்வரை செல்வதற்கு தகுதி பெற்றிருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் அதிபர் ஜீ.ஜீவனேஸ்வரன் இங்கு குறிப்பிடுகையில், கட்டுமுறிவுக்குளம் பாடசாலையில் விளையாட்டுத்துறை சார்ந்து மாணவர்களை முன்னேற்றுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் எவ்விதமான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில், பாடசாலை சமூகம், பழைய மாணவர்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு காரணமாகவே உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். அத்துடன் எமது பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டில் நல்ல ஆர்வமுள்ளதுடன் திடகாத்திரமான மனோதைரியமும் உண்டு. நகர பாடசாலைகளைப்போன்று தேவையான வளங்கள் கிடைக்கப்பெற்றால் விளையாட்டுதுறைசார் வெற்றிகளை வலயத்திற்கும் மாவட்டத்திற்கும் தேசியத்திற்கும் கொண்டுவரமுடியுமென்பதில் மாற்றுக்கருத்தில்லை - என்றார்.

போடியார் புலம்பல்!

ஜனாதிபதி ரணிலைக் கண்டு உலக நாடுகள் எல்லாம் அஞ்சுகின்றன என வஜிரவர்தன எம்.பி. சொல்லுறாரு எலுவா..?

அப்ப உலகத்திலே குழி பறிக்கிற ஒரு நரித்தலைவர் ரணில்தான் எண்டத அவர் சொல்லாமல் சொல்லுறாரு போல. ஓண்டா தம்பி அவர் தனியவந்து எப்படி 225 பேரையும் வளைத்து எடுத்திருக்காரு எண்டா கிழட்டு நரியின் கெட்டித்தனம்தான் எலுவா.?

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணத்திற்கு இரங்கல் தெரிவிக்க வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் காரியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு, நினைவுப் புத்தகத்தில் தனது இரங்கல் செய்தியை பதிவு செய்தார்.

நூறுநாள் செயல் முனைவின் 45ஆவது நாள் போராட்டம் வாகரையில் முன்னெடுப்பு!

(கல்லடி நிருபர்)

"வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 45ஆம் நாள் போராட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்திலுள்ள இறாலோடைக் கிராமத்தில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

இப்போராட்டமானது இறாலோடைக் கிராமக் கடற்கரையில் மக்கள் ஒன்றிணைந்து, எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும். எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்றுகூடுவது எங்கள் உரிமை, எங்கள் நிலங்களை அபகரிக்காதே போன்ற பல கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கிராம மக்கள் தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளான அத்துமீறிய காணி அபகரிப்புகள், கடல் வளங்களை சுரண்டுதல், குடிநீர்ப் பிரச்சினை, பூர்த்திசெய்யப்படாமல் உள்ள வீட்டுத்திட்டங்கள், பூர்த்திசெய்யப்படாமல் உள்ள நீர்த்தாங்கி பணி மற்றும் மீன்பிடியை ஜீவனோபாய தொழிலாகக் கொண்ட மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்காமை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக தமது கோரிக்கைகளை அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு சென்றடையும் வகையில் ஊடகங்களிடம் முன்வைத்தனர்.

அத்தோடு இறாலோடை கிராமத்தில் பாரிய பிரச்சினையாக உள்ள குடிநீர் மற்றும் வீதி புனரமைப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்தனர். இந்தக் கவனயீர்ப்பு நிகழ்வில் சிவில் அமையத்தின் இணைப்பாளர் ஜெ.கோபிநாத், சிவில் அமையத்தின் உத்தியோகத்தர் இ.ரமேஷ், சிவில் சமூகம் சார்ந்த செயற்பாட்டாளர்கள், பிரதேச மீனவ மற்றும் விவசாய சங்கத்தினர், பிரதேச அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சபை ஒழுங்கமைப்பில் திருமலை மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலை மற்றும் நகர்புறத்தை அண்டிய கரையோரப் பிரதேசங்களைத் தூய்மையாக பேணுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (14) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலை அமையப் பெற்றிருக்கும் கரையோரப் பிரதேசத்தில் வைத்தியசாலைக் கழிவுகள் உட்பட கழிவுநீர் வெளியேற்றப்படுவதால் அப்பிரதேசத்திற்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகள் பாதிப்புகளுக்கு முகங்கொடுப்பதாக அரசாங்க அதிபருக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டதையடுத்து சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சபையின் ஒழுங்கமைப்பின்கீழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் இவ்விசேட கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

திருகோணமலை நகரம் சுற்றுலா நகரமாகக் காணப்படுகின்றது. கரையோரம்சார் பகுதிகளில் கழிவுகளை அப்புறப்படுத்தி துர்நாற்றம் ஏற்படக்கூடிய பிரதேசங்களாக மாற்றியமைப்பதனை விடுத்து தூய்மையானதும் இரம்மியமானதுமான பிரதேசமாக கடற்கரையோரங்களை பேண ஒவ்வொரு பிரஜையும் தமது பங்களிப்பை நல்க வேண்டும்.

பொது வைத்தியசாலை அமையப்பெற்றுள்ள கரையோரம்சார் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் நீராட வருகின்றனர். அப்பிரதேசத்தில் கழிவுகள் வெளியேற்றப்படும்போது சுற்றுலாப் பயணிகளுடைய வருகைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அவர்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தும்.

அப்பிரதேசத்தில் பவளப்பாறைகள் காணப்படுவதாகவும் கழிவகற்றல் செயற்பாடு மூலம் பவளப்பாறை பாதிப்பிற்குட்படும். எனவே, இது தொடர்பில் நீண்டகால, நடுத்தர கால, குறுங்கால செயற்றிட்டங்களை வடிவமைத்து உரிய நிறுவனங்கள் செயற்படுமாறு அரசாங்க அதிபர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை 11 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்டதாகக் காணப்படுகின்றது. பொது வைத்தியசாலை மூலம் வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகள் உரிய நியமங்களைப் பின்பற்றி அழிக்கப்படுகின்றன. இரசாயனக் கழிவுகள் தன்னுடைய பதவிக்காலத்தில் கரையோரத்துக்கு விடுவிக்கப்படவில்லை. அவ்வாறான சம்பவங்கள் பதிவாகினால் அது தொடர்பாக தன்னை அறிவுறுத்துமாறும் கரையோர சுற்றாடலைப் பேணிப் பாதுகாக்க வைத்தியசாலை அபிவிருத்தி சமூகத்தை இணைத்து செயற்படவிருப்பதாகவும் திருகோணமலை பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன், வைத்தியசாலையில் வெளியேற்றப்படும் கழிவுநீரைக் கடலுடன் கலக்கவிடாமல் அவற்றை பவுசர் மூலம் சேகரித்து கன்னியா கழிவகற்றல் பிரதேசத்தில் உரிய முறைப்படி விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டது. திருகோணமலை நகரசபை இச்செயற்பாட்டை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. அத்துடன், எதிர்வரும் 23ஆம் திகதி காலை 7.30 மணியளவில் திருகோணமலை பொது வைத்தியசாலை சார்ந்த கரையோரப் பிரதேசத்தில் தூய்மைப்படுத்தல் சிரமதானம் மேற்கொள்வதாகவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், சமுத்திரச் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் வடக்கு, கிழக்கு உதவி முகாமையாளர் ரி.ஸ்ரீபதி, திருகோணமலை நகர சபை செயலாளர், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மலேஷிய முன்னாள் அமைச்சர் டத்தோ சாமிவேலு காலமானார்

மலேஷிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் டத்தோ சாமிவேலு தனது 86ஆவது வயதில் நேற்று (15) காலமானார்.

அவரின் மறைவுக்கு இந்தியா உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மலேஷியாவில் இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களில் முக்கியமானவர் சாமிவேலு. மலேஷியாவின் இபோ நகரில் 1936ஆம் ஆண்டு பிறந்த இவர், 1959ஆம் ஆண்டு மலேஷிய அரசியலில் கால்பதித்தார்.

1979ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டுவரை மலேஷிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மக்கள் சேவை ஆற்றியவர். 1963இலிருந்து மலேஷிய வானொலி மற்றும் தொலைக்காட்சியில் பல ஆண்டுகள் தமிழ் செய்தி அறிவிப்பாளராகவும், மலேஷிய தகவல் இலாகாவில் நாடக கலைஞராகவும் பணியாற்றியுள்ளார். இவர் ஒரு தமிழ்மொழி ஆர்வலர்.

தகவல் தொழில்நுட்பம், பொதுப் பணி போன்ற முக்கியமான துறைகளின் அமைச்சராக பதவி வகித்தவர். நீண்டகாலம் மலேஷிய அமைச்சரவையில் இருந்தவர் எனும் சாதனையும் இவருக்கு உண்டு. இவருடைய அரசியல் வாழ்க்கையில் சாதனைகளும் சோதனைகளும் உள்ளன. இந்நிலையில், வயது மூப்பு காரணமாக நேற்று தனது 86ஆவது வயதில் டத்தோ சாமிவேலு காலமானார். இவர் மலேஷிய அமைச்சரவையில் 29 ஆண்டுகள் மூத்த அமைச்சராக பதவி வகித்தவர். மலேசிய தமிழர் அரசியல் வரலாற்றில், 'டத்தோ' ஒரு மறக்கவியலா அத்தியாயம். அவரது இறுதிச்சடங்கு இன்று பிற்பகல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டத்தோ சாமிவேலு மறைவுக்கு இந்தியா உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில்,

'மலேஷியாவின் முன்னாள் அமைச்சரவை அமைச்சரும், மலேஷியாவின் முதல் பிரவாசி பாரதீய சம்மான் விருது பெற்றவருமான டொக்டர் எஸ்.சாமிவேலுவின் மறைவு வருத்தமளிக்கிறது. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள். ஓம் சாந்தி" என்று பதிவிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சாமிவேலு சந்தித்தபோது...

19இல் பூவுலகிற்கு விடைகொடுக்கும் மகாராணி இரண்டாம் எலிசபெத்

கோஹினூர் வைரம் பதிக்கப்பட்ட கிரீடம் - செங்கோலுடன் பீரங்கி வண்டியில் ஊர்வலம் வந்த ராணியின் உடல் தாங்கிய பேழை

5 கி.மீ. தூரம் – நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் கண்ணீர் அஞ்சலி

மறைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19ஆம் திகதி 11 மணியளவில் இடம்பெறவுள்ளன.

வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் வைக்கப்பட்டுள்ள ராணியின் இறுதிச்சடங்கில் 500இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்கின்றனர். ஆனால், ரஷ்யா, பெலராஸ் மற்றும் மியன்மார் நாட்டுத் தலைவர்களுக்கு பிரித்தானிய அரசு அழைப்பு விடுக்கவில்லை.

சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அஞ்சலி செலுத்துவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் வைக்கப்பட்டுள்ள ராணியில் உடலுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி காலை 6.30 வரை மக்கள் அஞ்சலி செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள், மறைந்த தங்களின் ராணிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சுமார் 5 கிலோமீற்றர் தூரம் நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

பிரித்தானிய மகாராணியாக 70 ஆண்டுகள் கோலோச்சிய ராணி இரண்டாம் எலிசபெத் ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் அரண்மனையில் வசித்துவந்த நிலையில், உடல்நலக்குறைவால் கடந்த 8 ஆம் திகதி தனது 96ஆவது வயதில் காலமானார்.

அரச குடும்பத்தினர் மற்றும் ஸ்கொட்லாந்து மக்கள் அஞ்சலி செலுத்த தலைநகர் எடின்பர்க்கிலுள்ள ஹோலிரூட் ஹவுஸ் அரண்மனையில் கடந்த 11ஆம் திகதி ராணியின் உடல் வைக்கப்பட்டது. அங்கு அவர்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர், ராணியின் உடல் 13ஆம் திகதி லண்டனுக்கு ரோயல் விமானப்படை விமானம் மூலம் கொண்டுசெல்லப்பட்டது.

பின்னர், ராணி உடல் பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. தொடர்ந்து, ராணியின் உடல் பீரங்கி வண்டியில் ஏற்றப்பட்டு இராணுவ மரியாதையுடன் பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு 2 கிலோமீற்றர் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

அவரது மறைவையடுத்து, பட்டத்து இளவரசரான சார்ள்ஸ் (வயது 73) பிரிட்டனின் அரசராக பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், ராணியின் உடல் பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள நாடாளுமன்ற வளாகத்துக்கு புதன்கிழமை, பாரம்பரிய முறைப்படி குதிரை பூட்டிய பீரங்கி வண்டியில் இராணுவ மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

ராணியின் உடல் அடங்கிய பேழையின் மீது ராணி அணியும் கோஹினூர் வைரம் பதிக்கப்பட்ட கிரீடம், செங்கோல் மற்றும் மலர்வளையம் வைக்கப்பட்டிருந்தன. இதில் அரசர் மூன்றாம் சார்ள்ஸ், அவரது சகோதரி இளவரசர் ஏன், சகோதரர்களான இளவரசர் எண்ரூவ், இளவரசர் எட்வர்ட் உள்ளிட்ட அரச குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று மன்னர் சார்ள்ஸ் - டயனா தம்பதிகளின் புதல்வர்களும், ராணி எலிசபெத்தின் செல்லப் பேரன்களான இளவசர் வில்லியம்ஸ் மற்றும் ஹரி ஆகியோர் ராணியின் ஊர்வலத்தில் ஒருவரைத் தொடர்ந்து ஒருவர் வந்தனர். நீண்ட ஆண்டுகளுக்குப் பின்னர் இளவரசர்கள் வில்லியம்ஸ் - ஹரி ஆகியோர் இணைந்து வந்ததால் பிரிந்த குடும்பம் ஒன்றுசேர்ந்துவிட்டதாக மக்கள் நெகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதனையடுத்து ராணியின் உடல் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் வைக்கப்பட்டது. ராணியின் உடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். 3 நாட்களாக காத்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாக சென்று ராணிக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். எதிர்வரும் 19ஆம் திகதி காலை 6.30 வரை மக்கள் அஞ்சலி செலுத்தலாம். இதில், 10 இலட்சம் பேர் அஞ்சலி செலுத்துவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இறுதிச்சடங்கில் கலந்துகொள்வோர் யார், யார்?

ராணியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வோர் பட்டியல் வெளியாகிக்கொண்டிருக்கிறது.

அந்தவகையில் பொதுநலவாய அமைப்பிலிருந்து, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அவுஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி, நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் மற்றும் ஜமைக்கா ஆளுநர் ஜெனரல் சர் பெட்ரிக் ஆலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமெரிக்காவின் சார்பாக அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிட்டன் பிரதமர் லிஸ் ட்ரஸும் கலந்துகொள்வார்.

மேலும், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன், ஜேர்மன் அதிபர் ஃபிராங்க்-வோல்டர் ஸ்டெய்ன்மியர், இத்தாலி ஜனாதிபதி செர்ஜியோ மட்டரெல்லா மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் அதிபர் உர்சுலா வோன் டெர் லேயன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அரச விருந்தினர்களில் மொனாக்கோவின் இளவரசர் இரண்டாம் எல்பர்ட் மற்றும் இளவரசி சார்லீன், ஸ்பெயின் மன்னர் ஃபிலிப் மற்றும் ராணி லெடிசியா, பெல்ஜியத்தின் மன்னர் பிலிப் மற்றும் ராணி மாதில்டே, ஸ்வீடன் மன்னர் கார்ல் பதினாறாம் குஸ்டாஃப் மற்றும் ராணி சில்வியா, ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ, நெதர்லாந்தின் மன்னர் வில்லெம் - அலெக்சாண்டர் மற்றும் ராணி மாக்சிமா ஆகியோரும் பங்கேற்பார்கள்.

மன்னர் பிலிப்பின் பெற்றோர், முன்னாள் மன்னர் ஜுவான் கார்லோஸ் மற்றும் ராணி சோபியா, நோர்வேயின் மன்னர் ஐந்தாம் ஹரால்ட் மற்றும் டென்மார்க்கின் ராணி மார்கரேட் ஆகியோரும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரேஜ் டுடா, ஆஸ்திரியா ஜனாதிபதி அலெக்சாண்டர் வான் டெர் பெல்லன், லிதுவேனியாவின் ஜனாதிபதி கிடானாஸ் நௌசேடா, துருக்கியின் ஜனாதிபதி தைப் அர்துகான், இஸ்ரேலின் ஜனாதிபதி ஐசக் ஹெர்ஸாக், தென் ஆபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் மற்றும் பிரேஸில் ஜனாதிபதி ஜைர் போல்சனாரோ உள்ளிட்டோரும் இடம்பெறுகிறார்கள்.

ரஷ்யாவுடனான தற்போதைய போர் காரணமாக உக்ரைனின் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

19இல் இறுதிச்சடங்கு

வெஸ்ட்மினிஸ்டரில் இடம்பெற்றுவரும் இறுதி அஞ்சலிக்குப் பின்னர் 19ஆம் திகதி திங்கட்கிழமை முழு அரசு மரியாதையுடன், வின்ட்சர் கோட்டையிலுள்ள செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்தில் ராணியின் உடல் அவருடைய பெற்றோர் மன்னர் ஆறாம் ஜோர்ஜ் மற்றும் தாய் முதலாம் எலிசபெத், சகோதரி இளவரசி மார்கரெட் மற்றும் கணவர் இளவரசர் பிலிப் ஆகியோர் கல்லறைகளுக்கு அருகே உடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

“உங்களுடைய
அன்பான மகன் / மகளின்
திருமணத்துக்கு பொருத்தமான
துணையை தேடுகிறீர்களா?
அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை
நாம் உங்களுக்குத் தருகிறோம்.”

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7